    3. ஒலி முகாமை (Sound Management)
    4. முறைவழி முகாமை (Process Management)
    5. கோப்பு முகாமை (File Management)

28. பின்வரும் கூற்றுக்களுள் A, B, C, D உண்மையானது எது / எவை?
    A பணிசெயல் முறைமையானது பிரயோக மென்பொருள் வகையைச் சேர்ந்தது
    B Mac Os என்பது திறந்த மூல பணிசெயல் முறைமைக்குரிய உதாரணமாகும்
    C பணிசெயல் முறைமை மூலம் மென்பொருள்களும் வன்பொருள்களும் முகாமை செய்யப்படும்

    1. A மாத்திரம் 2. A, B மாத்திரம் 3. B, C மாத்திரம்
    4. C மாத்திரம் 5. A, C மாத்திரம்

29. ஒளிப்படமொன்றின் பிரிதிறன் (Resolution) மூலம் அளக்கப்படுவது யாது?
    1. அதில் அடங்கியுள்ள Pixel அளவு
    2. அதில் அடங்கியுள்ள நிறங்களின் எண்ணிக்கை
    3. அதன் பிரகாசம்
    4. அதன் ஒளி - இருள் விகிதம்
    5. படங்களின் அளவு

30. கணினியின் ஆற்றுகையை (Performance) மேம்படுத்த உதவும் மென்பொருள்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
    1. செய்பணி முறைமை (Operating System)
    2. முறைமை மென்பொருள் (System Software)
    3. பிரயோக மென்பொருள் (Application Software)
    4. பயன்படு மென்பொருள் (Utility Software)
    5. ஆற்றுகை மென்பொருள் (Performance Software)

31. கணினியொன்றுக்கு கடவுச்சொல் (Password) இடுவதன் நோக்கம் யாது?
    1. கணினியை நச்சு நிரல்களிலிருந்து பாதுகாத்தல்
    2. அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்குதல்
    3. இணையத்தில் இலகுவாகப் பிரவேசித்தல்
    4. பாதுகாப்பு உத்தி என்ற வகையில் பாவனையை மட்டுப்படுத்தல்
    5. கணினியைக் கள்வர்களிடமிருந்து பாதுகாத்தல்

32. கணினியொன்றினுள் நச்சுநிரல் புகுவதன்மீது செல்வாக்குச் செலுத்தும் ஒரு காரணி **அல்லாதது** பின்வருவனவற்றுள் எது?
    1. கணினிகளை பொதுவில் பயன்படுத்தல்
    2. நச்சுநிரல் எதிர் மென்பொருளை இற்றைப்படுத்தாமை
    3. அறிமுகமற்ற ஒருவர் அனுப்பிய மின்னஞ்சலைத் திறத்தல்
    4. கள்ள (Pirated) மென்பொருளைப் பயன்படுத்தல்
    5. மேற்படி எதுவுமல்ல

33. கணினியின் தொழிற்பாடு மீது நேரடியாகச் செல்வாக்குச் செலுத்தக் கூடியது பின்வருவனவற்றுள் எது?
    1. நச்சுநிரல் செய்நிரல்கள்
    2. Trojen Horse (ட்ரோஜன் ஹோர்ஸ்) செய்நிரல்கள்
    3. Spyware (உளவுபார்த்தல்) செய்நிரல்கள்
    4. மேற்படி மூன்றும்
    5. மேற்படி எதுவுமல்ல

34. திறந்த நிலையிலுள்ள வெவ்வேறு செய்நிரல்களுக்கு இடையே இடமாறுவதற்காக பயன்படும் குறுக்குவழிச் சாவி யாது?

1. Alt + Tab	2. Ctrl + Tab	3. Alt + Shift
4. Ctrl + Shift	5. Ctrl + W	

பல்தேர்வு வினாக்களுக்கான விடைகள்

1 - 2	11 - 4	21 - 3	31 - 4
2 - 5	12 - 4	22 - 3	32 - 1
3 - 1	13 - 3	23 - 2	33 - 4
4 - 3	14 - 2	24 - 2	34 - 1
5 - 2	15 - 3	25 - 3	
6 - 2	16 - 4	26 - 3	
7 - 3	17 - 2	27 - 3	
8 - 2	18 - 4	28 - 4	
9 - 3	19 - 2	29 - 1	
10 - 2	20 - 3	30 - 4	

அலகு - 9 திரிகோண கணிதம்
பல்தேர்வு வினாக்கள்

1. 

$80\,cm$ நூலொன்றின் அந்தத்தில் கட்டப்பட்ட கல்லொன்றின் மூலம் எளிய ஊசலொன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன் இயக்கத்தின்போதான அதி உச்ச உயரத்தில் நூல் நிலைக்குத்துடன் 60^0 கோணத்தை அமைக்கின்றது. அவ்வேளையில் சுமையின் நிலைக்குத்து உயரமாக அமைவது எது?

(1) 20 (2) $\left(80-40\sqrt{3}\right)$

(3) 40 (4) $40\sqrt{3}$

(5) 80

2. 135^0 கோணத்தை ஆரையனில் தருவது எது?

(1) $\pi/135$ (2) $\pi/4$ (3) $\pi/3$

(4) $3\pi/4$ (5) π

3. 

இவ்வாரைச்சிறையின் வில்லின் நீளம் 2π எனின், அதன் ஆரையாக அமைவது எது?

(1) $1.5\,cm$ (2) $3\,cm$

(3) $6\,cm$ (4) $3\pi\,cm$

(5) $175\,cm$

4. ஆரை r_1, r_2 ஆகவுள்ள ஆரைச்சிறைகளின் கோணம் ø ஆகும். ஆரை r_1 ஆகவுள்ள ஆரைச்சிறையின் பரப்பு ஆரை r_2 ஆகவுள்ள ஆரைச்சிறையின் பரப்பளவின் இரு மடங்காகும். r_1, r_2 ஆகியவற்றிற்கு இடையிலான சரியான தொடர்பைக் காட்டுவது

(1) $r_1=2r_2$ (2) $r_1=\sqrt{2r_2}$ (3) $2r_1=r_2$

(4) $r_1=\sqrt{r_2}$ (5) $\sqrt{2}r_1=r_2$

5. பக்கநீளம் $3cm$ ஆகவுள்ள சதுரத்தின் மூலைவிட்டத்தின் நீளம்

(1) $3/\sqrt{2}$ (2) $\sqrt{6}$ (3) $3/\sqrt{2}$

(4) $6\,cm$ (5) $18\,cm$

6. பிளாத்திக்கு வளையலொன்று உடைந்த பின்னர் கிடைத்த இரு பகுதிகளினதும் நீளங்களை அளந்தபோது ஒன்றின் நீளம் 3 cm, மற்றைய பகுதியின் நீளம் 6 cm எனவும் அவதானிக்கப்பட்டது. இவ்வாறான பகுதிகள் 4 வீதம் ஒன்று சேர்த்து வளையலை ஆக்கமுடியுமாயின் அவ்வளையலின் ஆரை யாது?

(1) $2cm$ (2) $\pi/3\ cm$ (3) $\pi/6\ cm$

(4) $9/\pi\ cm$ (5) $18/\pi\ cm$

7. 

உருவில் உள்ள முக்கோணி ABC யின் பரப்பளவு

(1) $2\sqrt{33}\ cm^2$ (2) $7\ cm^2$ (3) $14\ cm^2$

(4 $28\ cm^2$ (5) $66\ cm^2$

8. 

உருவில் x இனால் காட்டப்படும் நீளமாக அமைவது

(1) 2.5 (2) $\frac{5}{\sqrt{3}}$ (3) 5

(4) $10\sqrt{3}$ (5) $\frac{10}{\sqrt{3}}$

9. மேலே உள்ள உருவின் பரப்பளவு எத்தனை சதுர அலகுகள்?

(1) 12 (2) $6+12.5\sqrt{3}$ (3) $6+12.5$ (4) $6+\frac{12.5}{\sqrt{3}}$ (5) 31

10. $\sin 63^0 = 0.8910$ எனின், $\cos 27^0$ இற்கு சமனாக அமைவது

(1) $\sin 27^0$ (2) 0.8910 (3) 0.4455 (4) $\cos 63^0$ (5) 0.4539

11. A, B, C எனும் மூன்று புள்ளிகள் கொண்ட நிலைக்குத்துக் கம்பங்கள் நிலத்தில் $A\hat{B}C = \frac{\pi}{2}$ ஆகுமாறு அமைக்கப்பட்டுள்ளது. $\tan A\hat{B}C = \frac{5}{12}$ எனின், $\sin B\hat{A}C$ யின் பெறுமானமாக அமைவது

(1) $\frac{5}{13}$ (2) $\frac{12}{13}$ (3) $\frac{5}{12}$ (4) $\frac{1}{12}$ (5) $\frac{1}{5}$

12. 

உருவில் ABCD பகுதியினால் காட்டப்பட்டிருப்பது மேடையொன்றின் முற்பக்கத் தோற்றமாகும். ABCD யின் பரப்பளவு 25π எனின், $A\hat{O}D$ இன் பெறுமானத்தை ரேடியனில் தருவது எது?

(1) $\frac{\pi}{3}$ (2) $\frac{\pi}{4}$

(3) $\frac{\pi}{6}$ (4) $\frac{\pi}{5}$ (5) $\frac{2\pi}{5}$

13. 

உருக்கினால் இணைக்கப்பட்ட சதுரஅடிக் கூம்பகமொன்றின் சட்டகம் உருவில் தரப்பட்டுள்ளது. முக்கோண வடிவ முகமொன்று கிடையுடன் அமைக்கும் கோணம் α எனின், α இன் பெறுமானமாக அமைவது

(1) $\sin^{-1}\frac{3}{4}$ (2) $\cos^{-1}\frac{4}{5}$

(3) $\cos^{-1}\frac{3}{5}$ (4) $\sin^{-1}\frac{3}{5}$

(5) $\tan^{-1}\frac{3}{4}$

14. 

OA என்பது நிலைக்குத்துக் கோபுரமாகும். C யினால் கட்டடமொன்றின் 1ம் மாடியின் ஒருபுள்ளி காட்டப்பட்டுள்ளது. C யில் இருந்து கம்பத்தின் உச்சிக்கான ஏற்றக்கோணம் 60^0 ஆவதோடு கம்பம், கட்டடம் ஆகியவற்றுக்கு இடையிலான கிடைத்தூரம் $20\,m$ ஆகும். கோபுரத்தின் உயரமாக அமைவது

(1) $\left(6+20\sqrt{3}\right)m$ (2) $\left(20\sqrt{3}-6\right)m$

(3) $\left(10\sqrt{3}+6\right)m$ (4) $\left(6+\frac{20}{\sqrt{3}}\right)m$

(5) $\left(\frac{10}{\sqrt{3}}+6\right)m$

15. 

உருவில் உள்ளது இணைகர வடிவில் அமைக்கப்பட்ட நீர்த்தொட்டியொன்றாகும். $A\hat{B}C=\frac{\pi}{3}$ எனின், ABCD யின் பரப்பளவாக அமைவது

(1) $600\,m^2$ (2) $1000\sqrt{3}\,m^2$

(3) $1000\,m^2$ (4) $600\sqrt{3}\,m^2$

(5) $500\,m^2$

16. 

உருவில் காட்டப்பட்டுள்ளது இரும்புக் கம்பிச்சட்டங்கள் மூலம் அமைக்கப்பட்ட கனவுரு வடிவச் சட்டகமாகும். HD இன் உயரம் $10\ cm$, ஆகவும் $\tan\alpha=\frac{1}{2\sqrt{2}}$ அடி சதுரமாகவும் அமையும் விதத்திலும் கனவுருச் சட்டகத்தை அமைப்பதற்குத் தேவையான இரும்புக் கம்பியின் மொத்த நீளம்

(1) $\left(80\sqrt{2}+40\right)cm$ (2) $200\,cm$ (3) $160\,cm$

(4) $120\,cm$ (5) $\left(160\sqrt{2}+40\right)\ cm$

17. 

அடி சதுரவடிவில் அமைந்த $20\ m$ நீள மண்டபத்தின் உயரம் $5\ m$. அதன் நிலமட்டத்தின் நடுவே நின்ற நிலையில் இருக்கும் மாணவனுக்கு மண்டபத்தின் மேலே புள்ளி H தென்படும் ஏற்றக்கோணமாக அமைவது

(1) $\tan^{-1}\left(\frac{1}{2}\right)$ (2) $\tan^{-1}\left(\frac{1}{\sqrt{2}}\right)$

(3) $\tan^{-1}\left(\frac{1}{2\sqrt{2}}\right)$ (4) $\tan^{-1}\left(\frac{1}{4}\right)$

(5) $\tan^{-1}\left(\sqrt{2}\right)$

18. 

மோட்டார் வாகனமொன்று பாலமொன்றின் மீது பயணிக்த்து இறுதியில் ABCD வடிவமான சாய்வின் வழியே பயணிக்கிறது. அச்சாய்வில் மோட்டர் வாகனம் பயணித்த மிகக் குறுகிய தூரமாக அமைவது

(1) $10\sqrt{3}\ m$ (2) $15\sqrt{3}\ m$

(3) $7.5\ m$ (4) $30\ m$

(5) $30\sqrt{3}\ m$

19. 

நீர்த்தொட்டியொன்றின் பாதுகாப்புக்காக அமைக்கப்படும் தட்டு மூடி கூம்புவடிவில் அமைந்துள்ளதோடு அதன் ஆரை $7\ m$ ஆகும். சாய்வுப் பக்கம் கிடையுடன் 30^0 கோணத்தை அமைக்கிறது. அம்மூடியை அமைக்கத் தேவையான தகட்டின் பரப்பளவு

(1) $\frac{308}{\sqrt{8}}\ m^2$ (2) $308\ m^2$ (3) $\frac{154}{\sqrt{3}}\ m^2$

(4) $154\ m^2$ (5) $\frac{308}{\sqrt{3}}\ m^2$

20. 

பூங்கா

வீட்டு முன்றலில் பூங்காவொன்று அமைக்கப்பட்டுள்ள விதம் உருவில் காட்டப்பட்டுள்ளது. பூங்காப் பகுதியின் பரப்பளவு m^2 இல்,

(1) 7π (2) $\frac{14\pi}{3}$ (3 14π

(4) $\frac{154\pi}{3}$ (5) $\frac{196\pi}{3}$

21. நிலைக்குத்து கம்பமொன்றிலிருந்து $21\ m$ தூரத்திலுள்ள கமலிற்கு கம்பத்தின் உச்சி 30^0 ஏற்றக்கோணத்தில் தென்படுகின்றது. கம்பத்தின் உயரம்,

(1) $21\sqrt{3}m$ (2) $7\sqrt{3}m$ (3) $21m$ (4) $10\sqrt{3}m$ (5) $10m$

22. வீட்டின் மேல்மாடியில் நிற்கும் சுதனிற்கு, பாதையில் பயணிக்கும் மோட்டர் வாகனமொன்று குறித்த கணத்தில் 30^0 இறக்கக் கோணத்தில் தென்பட்டது. 1ம் மாடியில் அவதானிப்புப் புள்ளி நிலமட்டத்திலிருந்து $9\ m$ உயரத்தில் அமைந்திருந்ததெனின், அக்கணத்தில் அந்த மோட்டர் வாகனம் வீட்டிலிருந்து எவ்வளவு தூரத்தில் இருந்தது?

(1) $18\,m$ (2) $18\sqrt{3}\,m$ (3) $9\sqrt{3}\,m$ (4) $9\sqrt{3}/2\ m$ (5) $9/\sqrt{3}\,m$

23. 

பாடசாலையின் முன்வாயில் கதவின் தோற்றம் உருவில் உள்ளது. முக்கோணப் பகுதி ABE தகட்டினால் அமைக்கப்பட்டது. AE = BE ஆகும். கதவிற்குத் தேவையான தகட்டின் பரப்பளவு

(1) $4\,m^2$ (2) $16\,m^2$

(3) $16\sqrt{3}\,m^2$ (4) $4\sqrt{3}\,m^2$

(5) $8\,m^2$

24. 

நிலைக்குத்துக் கம்பமொன்றின் உறுதியைப் பேணுவதற்கு கம்பத்தின் இரு பக்கத்திலும் கம்பிகள் பிணைக்கப்பட்டுள்ள விதம் உருவில் காட்டப்பட்டுள்ளது. கம்பத்தின் உயரம் $12\,m$ ஆகவும் கம்பி கிடையுடன் அமைக்கும் கோணம் 30^0 யும் எனின், தேவையான கம்பியின் நீளமாக அமைவது?

(1) $48\,m$ (2) $24\,m$

(3) $24/\sqrt{3}\ m$ (4) $24\sqrt{3}\,m$

(5) $12\sqrt{3}\,m$

25. 

வில் வடிவில் மடிக்கப்பட்ட AB கம்பியின் நீளமாக அமைவது

(1) $\dfrac{147\pi}{4}cm$ (2) $\dfrac{7\pi}{2}cm$

(3) $14\pi\ cm$ (4) $21\pi\ cm$

(5) $\dfrac{21\pi}{2}cm$ (6) $\dfrac{21\pi}{4}cm$

26. 

உருவிலுள்ள வளைவான பகுதி A B C D ஒரு கூரை ஆகும். A B வில்வடிவம், மையக்கோணத்தின் $\pi/6\ rad$ உம் ஆரை $14m$ உம் ஆகும். கூரை $21m$ நீளமுடையது எனின் $(BC = 21m)$, கூரைக்குத் தேவையான தகட்டின் பரப்பளவாக அமைவது

(1) $14\pi\ m^2$ (2) $21\pi\ m^2$

(3) $\frac{21\pi}{2}\ m^2$ (4) $49\pi\ m^2$

(5) $\frac{49\pi}{3}\ m^2$

27. நிலத்தில் நடப்பட்டுள்ள நிலைக்குத்துக் கம்பங்கள் இரண்டின் உயரங்கள் முறையே $20\ m$, $26\ m$ ஆகும். இரு கம்பங்களின் உச்சிகளும் கம்பியொன்றினால் இணைக்கப்பட்டுள்ளது. இரு கம்பங்களுக்கிடையிலான கிடைத்தூரம் $12\ m$ எனின், கம்பி கிடையுடன் அமைக்கும் கோணம்;

(1) $\sin^{-1}(6)$ (2) $\tan^{-1} 6$ (3) $\tan^{-1}(12)$ (4) $\tan^{-1}\left(\frac{1}{2}\right)$ (5) $\tan^{-1} 2$

28. 

இராணுவமுகாமொன்றின் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்புவேலிக்கு கிடையுடன் 60^0 அமைக்கும் கொங்கிறீற்றுத் தூண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தூணின் நீளம் $8m$ எனின், தூணின் உச்சிக்கு நிலமட்டத்தில் இருந்து உள்ள உயரமாக அமைவது

(1) $4\sqrt{3}\ m$ (2) $8\sqrt{3}\ m$

(3) $\frac{4}{\sqrt{3}}\ m$ (4) $\frac{8}{\sqrt{3}}\ m$

(5) $4\ m$

29. 

மலைக்குன்று ஒன்றின் உச்சியில் அமைக்கப்பட்டுள்ள நிலைக்குத்துக் கம்பத்தின் உயரம் $20\ m$ ஆகும். கம்பத்தின் உச்சி, நிலமட்டப் புள்ளி A கிடையுடன் 60^0 கோணத்தை அமைக்குமாறு கம்பி ஒன்றினால் இணைக்கப்பட்டுள்ளது. கம்பியின் நீளம் $60\ m$ எனின், A அமைந்துள்ள கிடைத்தளத்தில் இருந்து மலைக்குன்றின் நிலைக்குத்து உயரமாக அமைவது,

(1) $30\sqrt{3}\ m$ (2) $30\sqrt{3} + 20\ m$ (3) $\left(30\sqrt{3} - 20\right) m$

(4) $\left(60\sqrt{3} - 20\right) m$ (5) $60\sqrt{3}\ m$

30.



கட்டடமொன்று மூன்று சம உயரமான கட்டமொன்று சமஉயரமான இரண்டு மாடிகளைக் கொண்டது. கட்டடத்திலிருந் து 24 m தூரத்தில் உள்ள புள்ளியலிருந்து இரண்டாம் மாடியின் உச்சியை (Gs ;s p P) நோக்கியபோது அது 30^0 ஏற்றக்கோணத்தில் அமையப் பெற்றிருந்தது. கட்டடத்தின் ஒரு மாடியின் உயரமாக அமைவது

(1) $8\sqrt{3}\,m$ (2) $4\sqrt{3}\,m$ (3) $24\sqrt{3}\,m$

(4) $12\sqrt{3}\,m$ (5) $^{8}/_{\sqrt{3}}\,m$

கட்டுரை வினாக்கள் - திரிகோண கணிதம்

1. i.



பக்கம் AC யின் நீளம் a எனின், AB, BC ஆகியவற்றின் நீளங்களை a சார்பாகத் தருக.

ii.



(a) $P\hat{R}Q$ இன் பெறுமானத்தை ரேடியனில் (ஆரையனில்) தருக.

(b) PR இன் நீளத்தைக் காண்க.

(c) PQ இன் நீளத்தைக் காண்க.

iii. நேர்கோட்டுப் பாதையொன்றிலிருந்து $12\ m$ தூரத்திலுள்ள இராணுவ வீரரொருவருக்கு பாதையின் ஒரு முனையில் இருந்துவரும் எதிரிகள் கூட்டமொன்று பாதையுடன் $30^0 20'$ கோணத்திலும் பாதையின் மறுமுனையிலிருந்துவரும் எதிரிகள் கூட்டம் $42^0 12'$ கோணத்திலும் தென்படுகின்றது.

(a) இத்தகவல்களை வரிப்படமொன்றில் காட்டுக.

(b) இந்த வேளையில் இரு எதிரிக் கூட்டங்களுக்கிடையிலான தூரத்தைக் கணிக்க.

(c) இராணுவ வீரரிடமுள்ள துப்பாக்கி சரியான இலக்கை அடையும் தூரம் $25\ m$ எனின், தற்போதைய நிலையில் எதிரிக்கூட்டங்கள் பாதுகாப்பான சூழலில் இல்லை எனக் காட்டுக.

$$ID = 1.7090 \times 12 = 20.50\ m \qquad DR = 1.1028 \times 12 = 13.23\ m$$

2. i. பக்க நீளம் 2 அலகாக உள்ள சமபக்க முக்கோணியொன்று உருவில் காட்டப்பட்டுள்ளது. அதன் உச்சிக் கோணங்களின் இருகூறாக்கி எதிர்ப் பக்கங்களைச் செங்குத்தாக இருகூறிடுகின்றது.



இவ்வுருவைப் பயன்படுத்தி, $\sin 30^0$, $\sin 60^0$, $\cos 30^0$, $\cos 60^0$ என்பவற்றின் பெறுமானங்களைத் துணிக.

ii.



சுவரொன்றில் இணைக்கப்பட்டுள்ள கூரைப் பகுதியொன்று உருவில் காட்டப்பட்டுள்ளது. A B யினால் சுவர் காட்டப்பட்டுள்ளதோடு சுவர்வழியே B D எனும் இரும்புத் தீராந்தி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

(a) B C இன் நீளத்தைக் காண்க.

(b) C D இன் நீளத்தைக் காண்க.

iii. கூரையின் உறுதித்தன்மையை அதிகரிப்தற்கு, B யிலிருந்து AC யிற்கும், C யிலிருந்து AD யிற்கும் கிட்டிய தூரம் அமையும் விதத்தில் இரு கோல்களை இணைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

(a) B யிலிருந்து இணைக்கும் கோலின் நீளத்தைக் காண்க.

(b) C யிலிருந்து இணைக்கும் கோலின் நீளத்தைக் காண்க.

iv. இவ்வேலைப் பகுதியைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான கோல்களின் மொத்த நீளத்துக்கான ஒரு கோவையை எழுதுக. (இறுதிச் சுருக்கம் தேவையில்லை).

3. ஒன்றுக்கொன்று *12 m* இடைவெளியிலுள்ள இரு வேறு உயரமுடைய இரு கட்டடங்களுக்கு சரிமத்தியில் இருக்கும் ஒருவருக்கு அவற்றின் உச்சிகள் 70^0, மற்றும் $60^0 20'$ ஏற்றக் கோணத்தில் தென்படுகிறது.

i. இவற்றை வகைகுறிக்க வரிப்படமொன்று வரைக.

ii. கட்டிடங்களின் உயரங்களை h_1, h_2 எனக் கொண்டு இரு கோவைகளை எழுதுக.

iii. மேலே எழுதிய கோவைகளைப் பயன்படுத்தி h_1, h_2 என்பவற்றைக் கணிக்க.

iv. உயரம் குறைந்த கட்டடத்தின் அடிவாரத்திலிருந்து உயரம் கூடிய கட்டடத்தின் உச்சியை அவதானிக்கும் போதான ஏற்றக்கோணத்தைக் காண்க.

v. திரிகோண கணித விகிதங்கள், பைதகரஸின் தேற்றம் ஆகிய ஒவ்வொன்றையும் பயன்படுத்தி நீளங்களைக் காண்பதற்குத் தேவையான அடிப்படைத் தேவைகளை வெவ்வேறாகக் குறிப்பிடுக.

4. (a) i. இம் முக்கோணியின் செம்பக்கத்தைப் பெயரிடுக.

ii. இம்முக்கோணியினது பக்கங்களை $\sin\alpha$, $\cos\alpha$, $\tan\alpha$ இற்கான கோவைகளை எழுதுக.

iii. $B\hat{A}C = \frac{\pi}{6}$ எனின், AC, BC என்பவற்றைக் காண்க.



(b) P, Q, R என்பன உட்கூரையொன்றில் உள்ள ஒரே நேர்கோட்டில் அமையாத மூன்று புள்ளிகளாகும். Q இல் தொங்கும் மின்குமிழ் மின்வடமொன்றினால் இணைக்கப்பட்டுள்ளது. அம்மின்குமிழின் பாதுகாப்பிற்காக அதன் கீழ் முனையில் இருந்து P இற்கும், R இற்கும் இரண்டு ஒளியியல் நார்கள் இணைக்கப்பட்டுள்ளன. உட்கூரையில் இருந்து மின்குமிழின் கீழ்ப்பகுதியில் ஒளியியல் நார் இணைக்கப்பட்டுள்ள இடம் வரையிலான தூரம் 30 *cm* ஆகும். PQ=16 *cm*, QR=12 *cm*

i. குமிழின் கீழ்ப்பகுதியின் ஒளியியல் நார் இணைக்கப்பட்ட இடத்தை O எனக்கொண்டு இந்த அமைப்பிலுள்ள செங்கோண முக்கோணிகளை, வெவ்வேறாக, தரப்பட்டுள்ள அளவீடுகள் அடங்கலாக பெயரிடப்பட்ட வரிப்படத்தை வரைக.

ii. P R இன் நீளத்தைக் காண்க.

iii. P S இன் நீளத்தைக் காண்க.

iv. R S ஒளியியல் இழையின் நீளத்தைக் காண்பதற்கான கோவையொன்றை எழுதுக.

5.



அதிவேக நெடுஞ்சாலையில் மேம்பாலமொன்றின் மீது நிற்கும் பொலிஸ் அதிகாரியொருவர் சமதளப்பாதையில் வரும் வாகனத்தை $1^0 4'$ இறக்கக் கோணத்தில் காண்கிறார். அதனை அவதானித்த உடனேயே நிறுத்தற் கடிகாரத்தை முடுக்கினார். 5 செக்கனின் பின்னர் அம்மோட்டார் வாகனத்தினை இறக்கக் கோணம் $20^0 33'$ இல் காண்கிறார். மேம்பாலத்திலிருந்து பாதைக்கான நிலைக்குத்துத் தூரம் 12 *m* ஆகும்.

i. இறக்கக் கோணங்களை மேற்படி உருவில் குறித்து காட்டுக.

ii. கடைசி அவதானிப்புப் புள்ளியிலிருந்து பாலத்திற்கான கிட்டிய கிடைத்தூரத்தைக் காண்க. (கிட்டிய முழுவெண்ணில்)

iii. ஆரம்ப அவதானிப்புப் புள்ளியில் இருந்து பாலத்திற்கு உள்ள கிடைத் தூரத்தைக் காண்க.

iv. 5 செக்கன்களில் அவ்வாகனம் பயணித்த தூரத்தைக் காண்க.

v. மோட்டர் வாகனத்தின் வேகத்தைக் காண்க.

6. A B C எனும் முக்கோணியில் கோணம் CAB = 30^0 AC=3cm AB=4cm உம் ஆகும். முக்கோணி A B C யின் பரப்பளவைக் காண்க.

7. வீட்டுச் சுவரொன்று உருவில் காட்டப்பட்டுள்ளது. இந்த உருவில் காட்டப்பட்ட தகவல்களின் துணையுடன் நிலத்திலிருந்து சுவரின் உச்சிக்கான உயரத்தைக் கணிக்க.



8 அன்ரனா குழாயொன்று கிடையான நிலத்தில் நிலைக்குத்தாகப் பொருத்தப்பட்டுள்ளது. நிலத்தின் குறித்தவொரு புள்ளியிலிருந்து அன்ரானாவின் உச்சியை அவதானிக்கும்போது அதன் ஏற்றக்கோணம் 45^0 ஆகும். அவதானிக்கப்படும் இடம் மற்றும் அன்ரனா குழாய் பொருத்தப்பட்டுள்ள இடம் ஆகியவற்றை இணைக்கும் கோட்டிற்கு வெளியே $14\ m$ தொலைவிலுள்ள இடமொன்றிற்குச் சென்று அவதானித்தபோது அதன் ஏற்றக்கோணம் 30^0 ஆகும். அன்ரனா குழாயின் உயரத்தைக் காண்க.

9. கிடைநிலத்தில் கம்பமொன்று நிலைக்குத்தாக நடப்பட்டுள்ளது. இந்தக் கம்பத்தின் அடியிலிருந்து $70\ m$ தூரத்தில் நிற்கும் $1\frac{2}{3}m$ உயரமான நபரொருவருக்கு $36^012'$ ஏற்றக் கோணத்தில் கம்பத்தின் உச்சி தென்படுகின்றது. கம்பத்தின் உயரம் எவ்வளவாகும்?

10. நேர்கோட்டுப் பாதையில் பயணிக்கும் தொடருந்தொன்று $100\ m$ நீளமான சுரங்கவழிப் பாதையினுள் நுழையும்போது தொடருந்து பயணிக்கும் திசைக்கு $42^020'$ கோணத்தில் தொலைவில் கோபுரமொன்று தென்படுகின்றது. தொடருந்து வேகமாக சுரங்கவழிப் பாதையினூடே வெளியேறும்போது கோபுரம் தொடருந்து பயணிக்கும் திசைக்கு $45^056'$ கோணத்தில் தென்படுகின்றது. தொடருந்து வெளியேறும் இடத்திலிருந்து இந்தக் கோபுரத்துக்கான தூரம் எவ்வளவாகும்?

பல்தேர்வு விடைகள்

1 -3	2 -4	3 -3	4 -2	5 -3	6 -5	7 -2	8 -4	9 -4	10-2
11-2	12-2	13 -3	14-3	15-5	16-2	17-3	18-4	19-5	20-5
21-2	22-3	23-4	24-1	25-2	26-4	27-4	28-1	29-3	30-2

கட்டுரை வகை வினாக்களுக்கான விடைகள்

1. i.



$AB = a\sin\theta$

$BC = a\cos\theta$

ii.



(a) $P\hat{R}Q = 60^0 \times \frac{\pi}{180^0} = \frac{\pi}{3}$

(b) $PR = 12\cos 60^0$

$= 12 \times \frac{1}{2} = 6$

(c) $PQ = 12\sin 60^0$

$= 12 \times \frac{\sqrt{3}}{2} \quad = 6\sqrt{3}$

iii.



$\text{LSD} = 89^0\ 60'$

$\underline{30^0\ 20'}$

$59^0\ 40'$

$\text{L}\hat{\text{S}}\text{D}$ யிற்கு,

$\tan 59^0 40' = \frac{\text{LD}}{12}$

$\therefore \quad .7090 = \frac{\text{LD}}{12}$

$\text{D}\hat{\text{S}}\text{R} = 89^0\ 60'$

$\underline{42^0\ 12'}$

$47^0\ 48'$

$\text{D}\hat{\text{S}}\text{R}$ யிற்கு,

$\tan 47^0 48' = \frac{\text{DR}}{12}$

$\therefore \quad 1.1028 = \frac{\text{DR}}{12}$

iv. பாதையின் நீளம் $\text{LR} = 20.51 + 13.23$

$= 33.74m$

v. இராணுவ வீரர் நிற்கும் இடத்லிருந்து தொலைவிலுள்ள புள்ளி L ஆகும்.

LS இன் நீளத்தைக் கணித்தல $\sin 30^0 20' = \frac{12}{LS}$

$$0.5050 = \frac{12}{LS}$$

$$LS = \frac{12}{0.5050}$$

$$= 23.76\ m$$

இராணுவவீரரின் உச்ச இலக்கு $25m$ ஆகையால் எதிரியினர் பாதுகாப்பற்று இருப்பர்.

2. i.



$AD^2 = 2^2 - 1^1$

$AD^2 = 3$

$AD = \sqrt{3}$

ABD Δ யினால்

$$\sin 60^0 = \frac{\sqrt{3}}{2}$$

$$\cos 60^0 = \frac{1}{2}$$

$$\tan 60^0 = \frac{\sqrt{3}}{1}$$

DAC Δ யினால்

$$\sin 30^0 = \frac{1}{2}$$

$$\cos 30^0 = \frac{\sqrt{3}}{2}$$

$$\tan 30^0 = \frac{1}{\sqrt{3}}$$

ii. (a) $\tan 60^0 = \frac{2}{BC}$

$$= \frac{2}{BC}$$

$$BC = \frac{2}{\sqrt{3}}$$

(b) $\tan 30^0 = \frac{2}{BD}$

$$\frac{1}{\sqrt{3}} = \frac{2}{BC}$$

$$BD = \frac{2}{\sqrt{3}}$$

$$CD = 2\sqrt{3} - \frac{2}{\sqrt{3}}$$

$$= \frac{4}{\sqrt{3}}$$

அல்லது

$$\tan 30^0 = \frac{BC}{2}$$
$$0.5774 = \frac{BC}{2}$$
$$BC = 0.5774 \times 2$$
$$BC = 1.1548$$
$$BC = 1.15m$$

$$\tan 60^0 = \frac{BD}{2}$$
$$1.732 \times 2 = BD$$
$$3.464 = BD$$
$$3.46m = BD$$

$$CD = BD - BC$$
$$= 3.46m - 1.15m$$
$$= 2.31m$$

iii.



(a) $\sin 30^0 = \frac{x}{2}$

$0.5 \times 2 = x$

$1m = x$

(b) $\sin 30^0 = \frac{y}{2.31}$

$0.5 \times 2.31 = y$

$1.15m = y$

iv. $\sin 60^0 = \frac{2}{AC}$

$\frac{\sqrt{3}}{2} = \frac{2}{AC}$

$AC = \frac{4}{\sqrt{3}}m$

$\sin 30^0 = \frac{2}{AD}$

$\frac{1}{2} = \frac{2}{AD}$

$AD = 4m$

கோல்களின் மொத்த நீளம் $= 3.46m + 1m + 1.15m + \frac{4}{\sqrt{3}}m + 4m$

$= \left(9.61 + \frac{4}{\sqrt{3}}\right)m$

3. i.



ii. $\tan 60^0 20' = \frac{h_1}{6}$, $\tan 70^0 = \frac{h_2}{6}$,

iii. $1.756 = \frac{h_1}{6}$ $2.747 = \frac{h_2}{6}$

$h_1 = 1.756 \times 6$ $h_2 = 2.747 \times 6$

$h_1 = 10.536$ $h_2 = 16.482$

iv. $\tan\theta = \frac{h_2}{12}$ $\theta = 53^0 56'$

$= \frac{16.482}{12}$

$\tan\theta = 1.3735$

i. திரிகோண கணித விகிதத்தைப் பயன்படுத்துவதற்கென செங்கோண முக்கோணியின் பக்கம், கோணம் ஆகியவற்றைத் தெரிந்திருத்தல் அல்லது பக்கங்கள் இரண்டைத் தெரிந்திருத்தல் போதுமானதாகும்.

பைதகரசின் தொடர்பைப் பிரயோகிப்பதற்கென இரண்டு பக்கள் தெரிந்திருப்து போதுமானதாகும்.

4. (a) i. AC



ii. $\sin\alpha = \frac{BC}{AC}$

$\cos\alpha = \frac{AB}{AC}$

$\tan\alpha = \frac{BC}{AB}$

iii. $\cos\frac{\pi}{6}=\frac{BC}{AC}$

$\frac{\sqrt{3}}{2}=\frac{BC}{12}$

$BC=12\times\frac{\sqrt{3}}{2}$

$BC=6\sqrt{3}\,cm$

$\sin\frac{\pi}{6}=\frac{BC}{AC}$

$\frac{1}{2}=\frac{BC}{12}$

$BC=6\,cm$

(b) i.







ii. $P\hat{Q}R\ \Delta$ யில்

$PR=20cm$

$(5,4,5)\times 4$

iii. $P\hat{Q}S\ \Delta$ யில்

$PR^2=30^2+16^2$

$=900+256$

$PR^2=1156$

$PR=\sqrt{1156}$

iv. $RS^2=30^2+12^2$

$=900+144$

$RS^2=1044$

$RS=\sqrt{1044}$

5. i.



ii. $O\hat{C}A = 89^0\ 60'$

$20^0\ 33'$

$69^0\ 27'$

$\tan 69^0 27' = \frac{OA}{12}$

$2.668 = \frac{OA}{12}$

$OA = 32. -16m = 32\,m$

$O\hat{C}B = 89^0\ 60'$

$1^0\ 4'$

$88^0\ 56'$

$\tan 88^0\ 56' = \frac{OB}{12}$

$49.10 = \frac{OB}{12}$

$OB = 49.10 \times 12$

$OB = 589.2$

$OB = 589\,m$

iii. $589 - 32$

$557m$

iv. $\frac{557}{5} ms^{-1} = 111.2\,ms^{-1}$

6. $S = \frac{1}{2} bc \sin A$

$= \frac{1}{2} \cdot 3.4 \cdot \sin 30$

$= \frac{1}{2} \cdot 3.4 \cdot \times \frac{1}{2}$

$= 3$



ABC முக்கோணியின் பரப்பளவு 3 சதுர சென்ரி மீற்றர்களாகும்.

7.



$AF = h$ எனக் கொள்வோம்.

$\frac{h}{\text{BF}} = \tan 45 = 1 \Rightarrow \text{BF} = h$

$\frac{h}{\text{EF}} = \tan 60 = 1.73 \Rightarrow \text{EF} = \frac{h}{1.732}$

$\text{CD} = \text{BE} = 5$

மேலும், $\text{BE} = h + \frac{h}{1.732}$

$\therefore h\left(1 + \frac{1}{1.732}\right) = 5 \Rightarrow h\left(\frac{2.732}{1.732}\right) = 5$

$\therefore h = \frac{5 \times 1.732}{2.732} = 3.17$

நிலத்திலிருந்து சுவரின் உச்சிக்கான தூரம் $= 2.5 + 3.17$

$= 5.67\,m$

8.



$\frac{h}{\text{BC}} = \tan 45 = 1 \Rightarrow \text{BC} = h$

$\frac{h}{\text{CD}} = \tan 30 = 0.5774 \Rightarrow \text{CD} = \frac{h}{0.5774}$

$\text{BD} = \text{BC} + \text{CD}$

மேலும், $\text{BD} = 14$

$14 = h + \frac{h}{0.5774} = h\frac{1.5774}{0.5774}$

$\therefore h = \frac{14 \times 0.5774}{1.5774}$

$= 5.12$

$\therefore$ அன்ரனா குழாயின் உயரம் $5.12\,m$ ஆகும்.

9. கோபுரத்தின் உயரம் நபரின் கண்மட்டத்தின் கிடைக்கோட்டிலிருந்து h எனக் கொள்வோம்.



$\frac{h}{70} = \tan 36^0 12' = 0.7319$

$\therefore h = 70 \times 0.7319 = 51.23$

(அண்ணளவாக)

கோபுரத்தின் உயரம் $= 51.23 + 1\frac{2}{3}m$

$= 53.23 + 1.67\,m$

$= 52.9\,m$

10.



தொடருந்து புறப்பட்ட இடத்திலிருந்து கோபுரத்துக்கான தூரம் (BC), x எனக்

$\mathrm{DC} = x\sin 46^0 56'$

$\mathrm{BD} = x\cos 46^0 56'$

$\therefore \mathrm{AD} = 100 + x\cos 46^0 56'$

$\because \tan \mathrm{DAC} = \frac{\mathrm{CD}}{\mathrm{AD}}$

$\therefore \tan 42^0 20' = \frac{x\sin 46^0 56'}{100_x\cos 46^0 56'}$

$= \frac{x\sin 46^0 56'}{100 + x\sin 43^0 04'}$

$0.9110 = \frac{x \times 0.7306}{100 + x(0.6828)}$

குறுக்குப் பெருக்கத்தின் மூலம் $0.9110(100 + 0.6828x) = 0.7306x$

$91.1 = x(0.7306 - 0.9110 \times 0.6828)$

$91.1 = x(0.7306 - 0.6220)$

$x = x \times 0.1086$

$x = \frac{91.1}{0.1086} = 838.86$

இதற்கமைய கோபுரத்திற்கான தூரம் $= 838.86\,m$

அலகு 10 - வெப்பவியல்
பல்தேர்வு வினாக்கள்

1. உலோகமொன்றின் நீட்டல் விரிதகவு $1.2 \times 10^{-5}\ {}^0C^{-1}$ ஆகும். முறையே அதன் பரப்பு விரிதகவு (β) கனவளவு விரிதகவு (γ) ஆகியவற்றின் சரியான பெறுமானங்களைக் காட்டுவது பின்வருவனவற்றுள் எது?
   1. $\beta = 1.2 \times 10^{-5}\ {}^0C^{-1}$; $\gamma = 2.4 \times 10^{-5}\ {}^0C^{-1}$
   2. $\beta = 2.4 \times 10^{-5}\ {}^0C^{-1}$; $\gamma = 4.8 \times 10^{-5}\ {}^0C^{-1}$
   3. $\beta = 1.2 \times 10^{-5}\ {}^0C^{-1}$; $\gamma = 3.6 \times 10^{-5}\ {}^0C^{-1}$
   4. $\beta = 2.4 \times 10^{-5}\ {}^0C^{-1}$; $\gamma = 3.6 \times 10^{-5}\ {}^0C^{-1}$
   5. $\beta = 2.4 \times 10^{-5}\ {}^0C^{-1}$; $\gamma = 2.4 \times 10^{-5}\ {}^0C^{-1}$

2. அலுமினியத் தகடொன்றின் 1 cm^2 அளவுடைய சதுரவடிவத் துளையொன்று காணப்படுகின்றது. அலுமினியத்தின் நீட்டல் விரிதகவு $2.5 \times 10^{-5}\ {}^0C^{-1}$ எனின், வெப்பநிலையை 20 ^0C யினால் அதிகரித்தால் துளையின் அளவு எவ்வளவாகும்?
   1. 1.001 cm^2 2. 1.0001 cm^2 3. 1.0005 cm^2
   4. 1.0 cm^2 5. 0.999 cm^2

3. நீட்டல் விரிதகவு $1.9 \times 10^{-5}\ {}^0C^{-1}$ யை உடைய பித்தளை வளையமொன்றின் உள் ஆரை 2 cm ஆகும். இதனூடாக 4.02 cm கோளமொன்றைச் செலுத்துவதற்காகப் பித்தளை வளையத்தை எவ்வளவு வெப்பநிலை மாற்றத்திற்குட்படுத்தல் வேண்டும்?
   1. 40 ^0C 2. 64 ^0C 3. 264 ^0C 4 148 ^0C 5. 336 ^0C

4. சீரான தடிப்புடைய மெல்லிய உலோகத்தகடொன்றில் a ஆரை கொண்ட இரண்டு வட்ட வடிவத் துளைகள் இடப்பட்டுள்ளன. துளைகளின் மையங்களுக்கிடையேயான தூரம் x ஆகும். உலோகத்தின் நீட்டல் விரிதகவு α ஆயின் வெப்பநிலை θ இனால் அதிகரிக்கப்பட்டபோது இரு துளைகளதும் மையங்களுக்கிடையேயான புதிய தூரம் யாது?
   1. $x(1-\alpha\theta)$ 2. $x(1+\alpha\theta)$ 3. $x(1-\alpha\theta)$ 4. $x(1-2\alpha\theta)$ 5. $x(1+2\alpha\theta)$

5. V_g கனவளவுள்ள பாத்திரமொன்றில் V_m கனவளவு இரசம் அடங்கியுள்ளது கண்ணாடி, இரசம் ஆகியவற்றின் கனவளவு விரிவுகள் முறையே. γ_g , γ_m ஆகும். V_g / V_m எல்லா வெப்பநிலைகளிலும் பாத்திரத்தின் நிரம்பாக் கனவளவு மாறாதுள்ளதாயின் V_g / V_m இற்குச் சமமானது பின்வருவனவற்றுள் எது?



   1. γ_g / γ_m 2. γ_m / γ_g 3. $(\gamma_g . \gamma_m)$
   4. $(\gamma_m . \gamma_g) / \gamma_g)$ 5. $3\gamma_m / \gamma_m$

6. உலோகக் கோளமொன்று அதன் மையமானது, அறைவெப்பநிலையில் உள்ள திரவமொன்றின் மேற்பரப்புடன் சமமட்டத்தில் இருக்குமாறு மிதக்கின்றது. திரவத்தின் கனவளவு விரிதகவானது உலோகத்தின் கனவளவு விரிதகவைவிட அதிகமாகும். வெப்பநிலை அதிகரிப்பின் காரணமாக கோளத்தின் மையமானது.



   1. திரவ மட்டத்துடன் சமமான மட்டத்தில் காணப்படும்.
   2. முதலில் திரவ மேற்பரப்புக்கு மேலே சென்று பின்னர் கீழே செல்லும்.
   3. முதலில் திரவ மேற்பரப்புக்குக் கீழே சென்று பின்னர் மேலே செல்லும்.
   4. திரவ மேற்பரப்புக்கு மேலே மாத்திரம் செல்லும்.
   5. திரவ மேற்பரப்புக்கு கீழே மாத்திரம் செல்லும்.

7. 0 ^0C ல் காணப்படும் நீரை 100 ^0C வரை மெதுவாக வெப்பமேற்றும் போது அதன் அடர்த்தி
   1) படிப்படியாக அதிகரிக்கும்.
   2) படிப்படியாகக் குறைவடையும்.
   3) படிப்படியாக அதிகரித்து உச்ச நிலையடைந்து பின் மீண்டும் குறைவடையும்.
   4) மாற்றமேற்படாது.
   5) படிப்படியாகக் குறைந்து இழிவு நிலையை அடைந்து மீண்டும் அதிகரிக்கும்.

8. நீட்டல் விரிதகவு α இனைக் கொண்ட திரவியத்தினால் ஆக்கப்பட்டுள்ள பாத்திரம், அறைவெப்பநிலையில் V கனவளவு உடையது. எந்த வெப்பநிலையிலும் பாத்திரத்தின் வெறும் வெளியின் கனவளவு மாறிலியாக இருக்கத்தக்கதாக பாத்திரத்தில் இடக்கூடிய γ கனவளவு விரிதகவுள்ள திரவத்தின் கனவளவு யாது?

1. $\gamma V/3\alpha$ 2. $3\alpha V/\gamma$ 3. $\gamma V/\alpha$ 4. $\alpha V/\gamma$
5. $3\gamma V/\alpha$

9. உலோகத் துண்டொன்று 90 °C வரை வெப்பமேற்றி 30 °C யில் காணப்படும் நீர் கொண்ட கலோரிமானியினுள் இடப்பட்டது. இறுதி வெப்பநிலை 60 °C ஆகும். முதல் உலோகத் துண்டினது திணிவின் அரைப்பங்கிற்குச் சமமான திணிவுடைய அதே உலோகத்தின் துண்டொன்றை 90 °C வரை வெப்பமேற்றி 30 °C யில் காணப்படும் முன்னைய அதே அளவு நீர் உள்ள சர்வசமமான கலோரிமானியில் இடப்பட்டது. அப்போது இறுதி வெப்பநிலை எவ்வளவாகும்?

1. 35°C 2. 40°C 3. 45°C
4. 50°C 5. 55°C

10. A, B எனும் வேறுபட்ட இரண்டு பொருள்களின் சமமான கனவளவுகள் சமமான வெப்பக் கொள்ளளவு கொண்டவையாகும். B யின் தன்வெப்பக் கொள்ளளவு 4200 $Jkg^{-1}K^{-1}$ ஆகும். அதன் அடர்த்தி 1000 kgm^{-3} ஆகும். A யின் அடர்த்தி 2000 kgm^{-3} எனின், A யினது தன்வெப்பக் கொள்ளளவு யாது?

1 2000 $Jkg^{-1}K^{-1}$ 2 2100 $Jkg^{-1}K^{-1}$ 3 8400 $Jkg^{-1}K^{-1}$
4 1050 $Jkg^{-1}K^{-1}$ 5 4200 $Jkg^{-1}K^{-1}$

11. திணிவு M கொண்ட பொருளொன்றுக்கு Q அளவு வெப்பம் வழங்கப்படும்போது அதன் வெப்பநிலை θ வினால் அதிகரிக்குமெனின் பொருள் ஆக்கப்பட்டுள்ள திரவியத்தின் தன்வெப்பக் கொள்ளளவு யாது?

1. $Q/M\theta$ 2. Q/θ 3. $Q/(273+\theta)$
4 $Q/M(273+\theta)$ 5. $MQ\theta$

12.சூழலுடன் வெப்பப் பரிமாற்றம் நிகழாதபோது நிலைமாற்றத்திற்குட்படாத பொருளொன்றிற்கு வெப்பத்தை வழங்கும் வீதம் (Q/t) இற்கும் வெப்பநிலை வேறுபடும் வீதம் (θ/t) இற்கும் இடையேயான தொடர்பைக் காட்டும் வரைபாகக் கருதத்தக்கது பின்வருவனவற்றுள் எது?



13. சூழலுக்கு வெப்ப இழப்பு நிகழாதவாறு உலோகப் பாத்திரமொன்றினுள் சூடான திரவமொன்றும், குளிரான திரவமொன்றும் கலக்கப்பட்டன. இதன்போது

(A) சூடான திரவம் குளிராவதுடன், குளிரான திரவம் சூடாகும்
(B) தொகுதி இறுதிப் பொது மாறிலி வெப்பநிலையை அடையும்
(C) வெப்பமான திரவம் வெளியிட்ட வெப்பமானது, குளிரான திரவம் பெற்றுக் கொண்ட வெப்பத்திற்குச் சமனானது.

இக்கூற்றுக்களுள் சரியானது.

1. A மட்டும் 2. B மட்டும் 3. A, B ஆகியன மட்டும்
4. A, C ஆகிய மட்டும் 5. A, B, C ஆகிய எல்லாம்

14. கொதிகலனொன்றின் உள்ளே வெப்பநிலை 105 °C ஆகும். கொதிகலனினது சுவரின் தடிப்பு 2 cm ஆகும். அது 4 cm தடிப்புடைய திரவியமொன்றினால் கவசமிடப்பட்டுள்ளது. நித்தியநிலையில் வளியுடன் தொடர்புற்றுக் காணப்படும் கவசத் திரவியத்தின் வெளிப்பரப்பின் வெப்பநிலை 30 °C ஆகும். கொதிகலனுக்கும் கவசத் திரவியத்துக்கும் இடைப்பட்ட பொதுமேற்பரப்பின் வெப்பநிலை 100 °C ஆகும். கொதிகலன் ஆக்கப்பட்ட திரவியத்தின் வெப்பக்கடத்தாறு k_1 உம் காவலித் திரவியத்தின் வெப்பக் கடத்தாறு k_2 உம் எனின், k_1 / k_2 விகிதம் யாது?

1. 1/14 2. 1/7 3. 7

4. 14 5. 28

15. தொழினுட்பவியல் பயிலும் மாணவரொருவர் தயாரித்த ஓர் உபகரணத்திற்கு, வெப்பக் கட்டுப்பாட்டு ஆளியொன்று தேவையாக உள்ளது. அதற்காக ஈருலோக நாடவொன்றினைப் பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. சில உலோகங்களின் நீட்டல் விரிவுக் குணகங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

உருக்கு : $1.2 \times 10^{-5}\ ^oC^{-1}$

பித்தளை : $1.9 \times 10^{-5}\ ^oC^{-1}$

அலுமினியம்: $2.5 \times 10^{-5}\ ^oC^{-1}$

உணர்திறன்மிக்க (சிறிய வெப்பநிலை வேறுபாட்டுக்குத் துலங்கத்தக்க) ஆளியொன்றினை அமைப்பதற்கு முறையே A மற்றும் B உலோகமாகப் பயன்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமான உலோகச் சோடி பின்வருவனவற்றுள் எது?

1. A = உருக்கு, B = பித்தளை
2. A = பித்தளை, B = அலுமினியம்
3. A = அலுமினியம், B = பித்தளை
4. A = பித்தளை, B = உருக்கு
5. A = அலுமினியம், B = உருக்கு



16. கோலொன்றின் நீட்டல் விரிதகவு தொடர்பாக பின்வரும் கூற்றுக்களைக் கவனியுங்கள்.

A- கோலின் நீட்டல் விரிதகவு அக்கோலின் ஆரம்ப நீளத்துக்கு நேர்விகிதசமமானது

B- கோலின் நீட்டல் விரிதகவு, அக்கோலை வெப்பமேற்றியமையால் அதில் ஏற்பட்ட நீள அதிகரிப்புக்கு நேர்விகித சமமானது

C- கோலின் நீட்டல் விரிதகவு அக்கோலில் அதிகரித்த வெப்பநிலைக்கு நேர்மாறு விகிதசமமானது

இவற்றுள் **தவறான** கூற்று எது / கூற்றுக்கள் எவை?

1. A, B மாத்திரம் 2. B, C மாத்திரம் 3. A, C மாத்திரம்
4. A மாத்திரம் 5. A, B, C ஆகிய எல்லாம்

17. 10 மீற்றர் நீளமான இரும்புக் கோலொன்று 27 ^{0}C யில் உள்ளது. அக்கோலின் நீளம் 1.1 மில்லி மீற்றரினால் குறைவடையும் சந்தர்ப்பத்தில் அதன் வெப்பநிலை எவ்வளவாகும்? (இரும்பின் நீட்டல் விரிவுக்குணகம் $1.1 \times 10^{-5}\ K^{-1}$)

1. 10 ^{0}C 2. 17 ^{0}C 3. 20 ^{0}C 4. 0 ^{0}C 5. 8 ^{0}C

18. திண்மங்களின் பரப்பளவு விரிதகவுக்கும் (β) நீட்டல் விரிதகவுக்கும் (α) இடையிலான தொடர்பு யாது?

1. $\alpha^2 = \beta$ 2. $\alpha = \beta^2$ 3. $2\alpha = \beta^2$ 4. $\alpha = \beta/2$ 5. $\beta = \alpha/2$

19. திண்மமொன்றின் நீட்ட விரிதகவு, பரப்பளவு விரிதகவு ஆகியவற்றின் அலகுகள் முறையே எவை?

1. K^{-1}, K 2. K, K^2 3. K^{-1}, K^{-1} 4. K^{-1}, K^{-2} 5. K, K^{-1}

20. 5 cm ஆரையும் 20 cm நீளமும் கொண்ட ஒரே திரவியத்தினாலாக்கப்பட்ட சர்வசமமான இரண்டு கோல்களுள் ஒன்று பொள்ளானதாகவும் மற்றையது திண்ம உருளையாகவும் ஆக்கப்பட்டுள்ளன. இரண்டு கோல்களதும் வெப்பநிலையைச் சமஅளவினால் அதிகரித்த நிலையில் அக்கோல்கள் இரண்டினதும் விரிதகவு விகிதம் E_1 யாது?

1. 1 : 4 2. 1 : 8 3. 1 : 2 4. 1 : 6 5. 1 : 1

21. l_1, l_2 நீளமுள்ள திண்மப் பதார்த்தமொன்றினாலான இரண்டு கோல்களின் நீட்டல் விரிவு முறையே α_1 உம் α_2 உம் ஆகும். கோல்களிரண்டும் வெவ்வேறாக விரிவடையத்தக்க வகையில் படத்திற் காட்டியுள்ளவாறு அவற்றின் கீழ் அந்தங்கள் பொருத்தப்பட்டுள்ளன. எந்தவொரு வெப்பநிலையிலும் இரண்டு கோல்களதும் நீளங்களுக்கு இடையிலான வேறுபாடு சமமாக இருப்பதற்கான நிபந்தனை பின்வருவனவற்றுள் எது?



1. $\alpha_1\ell_1 = \alpha_2\ell_2$ 2. $\alpha_1\ell_2 = \alpha\ell_1$ 3. $\alpha_1\alpha_2 = \ell_1\ell_2$
4. $\alpha_1/\ell_1 = \alpha_2/\ell_2$ 5. $\alpha_1^2\ell_1 = \alpha_2^2\ell_2$

22 திரவ விரிவு தொடர்பான பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A- திரவ விரிவு, திண்ம விரிவை விட அதிக பெறுமானத்தைப் பெறும்.
B- திரவ விரிவு மீது பாத்திரத்தின் விரிவு செல்வாக்குச் செலுத்தும்
C- திரவமொன்றின் தோற்றக் கனவளவு விரிவானது திரவமொன்றின் உண்மைக் கனவளவு விரிவை விடக் கூடுதலானது.
இவற்றுள் சரியான கூற்று எது / கூற்றுக்கள் எவை?
1. A மாத்திரம் 2. B மாத்திரம் 3. C மாத்திரம்
4. A, B மாத்திரம் 5. B, C மாத்திரம்

23. திண்மமொன்றின் வெப்பநிலையை 0 ^{0}C யிலிருந்து 10 ^{0}C வரை உயர்த்தும்போது கனவளவில் ஏற்படும் பகுதி அதிகரிப்பு 0.033 ஆயின் திண்மத்தின் நீட்டல் விரிதகவு பின்வருவனவற்றுள் எது?
1. 0.0011 $^0C^{-1}$ 2. 0.011 $^0C^{-1}$ 3. 0.0027 $^0C^{-1}$
4. 0.03 $^0C^{-1}$ 5. 0.11 $^0C^{-1}$

24. அறைவெப்பநிலையில் (27^{0}C யில்) காணப்படும் 10 g நீரினது வெப்பநிலையை 25 ^{0}C யினால் உயர்த்துவதற்குத் தேவையான வெப்பத்தின் அளவு யாது?
(நீரின் தன்வெப்பக் கொள்ளவு 4200J kg^{-1} C^{-1} ஆகும்.)
1. 2050 J 2. 1100 J 3. 1050 J 4. 105 J 5. 205 J

25. 0 ^{0}C யில் உள்ள 1g பனிக்கட்டி, 10 ^{0}C யில் உள்ள 5g நீருடன் கலக்கப்பட்டது. பனிக்கட்டியின் உருகலின் மறைவெப்பம் 80 J g^{-1} ஆயின் கலவையின் இறுதி வெப்பநிலை எவ்வளவு?
1. 5 ^{0}C 2. 0 ^{0}C 3. -5 ^{0}C
4. -10 ^{0}C 5. மேற்படி எதுவுமல்ல

26. 2 kg திணிவுள்ள இரும்புக் குற்றியொன்றின் வெப்பநிலை 30 ^{o}C ஆகும். அதனை 90 ^{0}C வரை வெப்பமேற்றி, பொறிப்பகுதியொன்றுக்குப் பொருத்தமானவாறாக விசேடமான ஒரு வடிவத்தைக் கொண்டதாக மாற்றவேண்டியுள்ளது. இதற்காக அந்த இரும்புக் குற்றிக்கு வழங்க வேண்டிய வெப்பச் சக்தியின் அளவு யாது, இரும்பின் தன்வெப்பக் கொள்ளளவு = 470 J kg^{-1}C^{-1} ஆகும்.
1. 5.46 x 10^4 J 2. 5.64 KJ 3. 5.64 x 10^5 J 4. 5.46 x 10^3 J 5. 5.64 x 10^4 J

27. ஒரு கொதிகலனில் 100 ^{o}C யிலுள்ள 4 kg நீர் உள்ளது. பொறியொன்றினை இயக்குவதற்காக அதன்மூலம் 100 ^{o}C யில் உள்ள கொதிநீராவியை உற்பத்திசெய்ய வேண்டியுள்ளது. அதற்குத் தேவையான வெப்பத்தின் அளவு யாது?
(நீரின் ஆவியாதலின் தன்மறை வெப்பம் = 2.26 × 10^6 kg^{-1})
1. 10.04 x 10^6 J 2. 10 x 10^6 J 3. 9.04 x 10^6 J 4. 9.5 x 10^6 J 5. 10.04 x 10^5 J

28. 20 ^{o}C யில் உள்ள திண்ம வெள்ளி (Ag) உலோகக் குற்றியொன்றின் திணிவு 16.5 kg ஆகும். அதனைக் கொண்டு பிறிதொரு பாவனைப் பொருளைச் செய்வதற்காக அதனை உருக்கவேண்டியுள்ளது. அதற்காக வழங்க வேண்டிய வெப்பத்தின் அளவு யாது?
(வெள்ளியின் தன்வெப்பக் கொள்ளளவு = 230J kg^{-1} ^{o}C^{-1}, வெள்ளியின் உருகலின் தன்மறைவெப்பம் =8.8 x 10^4 J kg , உருகுநிலை = 961 ^{o}C)
1. 5.0 x 10^6 J 2. 4 x 10^6 J 3. 3 x 10^6 J 4. 2 x 10^6 J 5. 8 x 10^6 J

29. உருகலின் தன்மறைவெப்பம் என்றால்,
    1. யாதேனும் பொருளின் 1 kg இனது வெப்பநிலையை 1 ^oC யினால் உயர்த்துவதற்குத் தேவையான வெப்பத்தின் அளவாகும்.
    2. யாதேனும் பொருளைத் திண்ம நிலையிலிருந்து திரவ நிலைக்கு மாற்றுவதற்கு வழங்கவேண்டிய வெப்பத்தின் அளவாகும்.
    3. யாதேனும் பொருளின் 1 kg இனை, வெப்பநிலை மாற்றமின்றி திண்ம நிலையிலிருந்து திரவ நிலைக்கு மாற்றுவதற்கு வழங்க வேண்டிய வெப்பத்தின் அளவாகும்.
    4. யாதேனும் பொருளைத் திரவ நிலையிலிருந்து வாயு நிலைக்கு மாற்றுவதற்கு வழங்க வேண்டிய வெப்பத்தின் அளவாகும்.
    5. திண்ம நிலையில் உள்ள யாதேனும் பொருளின் வெப்பநிலையை 1 ^oC யினால் உயர்த்துவதற்குத் தேவையான வெப்பத்தின் அளவாகும்.

30 யாதேனுமொரு பொருளின் 1kg இனை வெப்பநிலை மாற்றமின்றி திரவ நிலையிலிருந்து ஆவி நிலைக்கு மாறும்போது அது பெறும் வெப்பம் எவ்வாறு அழைக்கப்படும்?
    1. ஆவியாதலின் மறைவெப்பம்
    2. ஆவியாக்கலின் மறைவெப்பம்
    3. உருகலின் மறைவெப்பம்
    4. ஆவியாதலின் வெப்பக் கொள்ளளவு
    5. குளிர்த்தலின் வெப்பக் கொள்ளளவு

31. ஆவியாதல், ஆவியாக்கல் ஆகியன தொடர்பான சரியாக கூற்று பின்வருவனவற்றுள் எது?
    1. ஆவியாதலும் ஆவியாக்கலும் எந்த வெப்பநிலையிலும் நிகழும்
    2. ஆவியாதல், ஆவியாக்கல் ஆகிய இரண்டு நிகழ்வுகளும் ஈரப்பதனில் தங்கியிருக்கும்
    3. ஆவியாக்கற் செயன்முறை கொதிநிலையில் நிகழும், ஆவியாதல் செயன்முறை எந்தவொரு வெப்பநிலையிலும் நிகழும்
    4. ஆவியாதல், ஆவியாக்கல் ஆகிய இரண்டும் ஒரே செயன்முறையைக் குறிக்கும் பதங்களாகும்.
    5. ஆவியாதல், கொதிநிலையில் நிகழும், ஆவியாக்கல் எந்த வெப்பநிலையிலும் நிகழும்

32. கோலொன்றின் வழியே வெப்பம் கடத்தப்படும் வீதத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் அடங்கிய தொகுதி பின்வருவனவற்றுள் எது?
    1. வெப்பநிலை வித்தியாசம், குறுக்குவெட்டுப் பரப்பளவு, தடிப்பு
    2. ஆரம்ப வெப்பநிலை, இறுதி வெப்பநிலை, தடிப்பு
    3. கோலின் குறுக்குவெட்டுப் பரப்பளவு, தடிப்பு, கோல் வெப்பமேற்றப்பட்ட வெப்பநிலை
    4. கோலின் இருமுனைகளுக்கு இடையேயான வெப்பநிலை வித்தியாசம், தடிப்பு, கோல் ஆக்கப்பட்டுள்ள திரவியம்
    5. கோலின் தன்மை, குறுக்குவெட்டுப் பரப்பளவு, ஆரம்ப வெப்பநிலை

33. கோலின் வெப்பக் கடத்தாறுக் குணகத்தின் அலகு யாது?
    1. $Wm\,^oC$ 2. $Wm^{-1}\,^oC^{-1}$ 3. $Wm\,^oC^{-1}$ 4. $Wm^{-1}\,^oC$ 5. $Wm^{-1}\,^oC^{-2}$

34. 2 cm விட்டமும் 40 cm நீளமுமுள்ள அலுமினியம் கோலொன்றின் ஓர் அந்தம் 360 ^oC வெப்பநிலையில் வைக்கப்பட்டள்ளதோடு மறு அந்தம் 10 ^oC யில் உள்ள நீரினுள் வைக்கப்பட்டுள்ளது. கோலின் வழியே வெப்பம் பாயும் வீதத்தைக் காண்க.
(அலுமினியத்தின் வெப்பக்கடத்தாறு $200Wm^{-1}\,^oC^{-1}$ ஆகும்.)
    1. 50 W 2. 52 W 3. 83 W 4. 80 W 5. 55 W

35. நன்கு காவலிடப்பட்ட உலோகக் கோலொன்றில் சூடான அந்தத்திலிருந்து குளிரான அந்தம் வரையில் வெப்பம் பாயும் விதத்தைச் சரியாகக் காட்டும் வரைபு பின்வருவனவற்றுள் எது?

1. 

2. 

3. 

4. 

5. 

36. 0.5 cm தடிப்பான யன்னற் கண்ணாடியொன்றின் மேற்பரப்பளவு 3 m^2 ஆகும். அதன் மேற்பரப்புகளிரண்டுக்கும் குறுக்கான வெப்பநிலை வித்தியாசம் 20 ^oC ஆயின், அந்த யன்னலுக்குக் குறுக்காக ஒரு மணி நேரத்தில் பாயும் வெப்பத்தின் அளவு யாது?
(கண்ணாடியின் வெப்பக் கடத்தாறு 0.84 $Wm^{-1}\ ^oC^{-1}$)

1. 10080×60^2 J
2. 1008×60^2 J
3. 10080×10^2 J
4. 1008×10^2 J
5. 10080×36^2 J

37. கோடைகாலத்தில் உடல் வெப்பநிலையிலும் உயர்வான அறைவெப்பநிலையில் காணப்படும், உலோகக் குற்றியொன்றினையும் மரக்குற்றியொன்றினையும் தொட்டுப் பார்க்கும்போது உலோகக் குற்றியானது மரக்குற்றியை விடச் சூடாக உள்ளதை உணரலாம். அட்டவணையில் உள்ள தரவுகளின்படி இச்சந்தர்ப்பம் தொடர்பாக, குறித்த தரவுகளுக்கு இடையிலான சரியான தொடர்பு பின்வருவனவற்றுள் எது?

பொருள்	வெப்பக்கடத்தாறு	வெப்பம் பாயும் வீதம்
உலோகம்	K_1	H_1
மரம்	K_2	H_2

1. $K_2 > K_1$ உம் $H_1 > H_2$ உம்
2. $K_2 > K_1$ உம் $H_2 > H_1$ உம்
3. $K_1 > K_2$ உம் $H_2 > H_1$ உம்
4. $K_1 > K_2$ உம் $H_1 > H_2$ உம்
5. $K_1 > K_1$ உம் $H_1 = H_2$ உம்

38. பின்வரும் நிகழ்வுகளுள், மேற்காவுகை ஒட்டம் ஏற்படும் சந்தர்ப்பங்களுக்கான உதாரணம் **அல்லாதது** எது?

1. நீர்த்தேக்கமொன்றில் குளிர் நீரும் சூடான நீரும் சுற்றோட்டமாகச் செல்லல்
2. வீட்டினுள் கதிர்த்தியின் அகற்புறம்
3. பாத்திரமொன்றில் நீரை வெப்பமேற்றும் போது
4. வளிமண்டலத்தில் உயரத்தே முகில்கள் உள்ளபோது
5. உலோகக் கோலொன்றின் ஓர் அந்தத்தை வெப்பமேற்றும் போது அவ்வுலோகக் கோலின் வழியே வெப்பம் கடத்தப்படல்

39. கதிர்ப்பு தொடர்பாக கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களைக் கருதுக.

a. கதிர்ப்புச் சக்தியை மின்சக்தியாக மாற்றுவதற்காக ஞாயிற்றுக் கலங்கள் பயன்படுத்தப்படும்.
b. கதிர்ப்பு மூலம் வெப்பத்தை இடம்மாறச்செய்ய ஊடகம் தேவையில்லை.
c. முகில்கள் அற்ற ஓர் இரவில் வெப்பப் பரவல் தடையின்றி நிகழுவதால் இராக்காலம் குளிர்ச்சியடையும்.

மேற்படி கூற்றுக்களுள் சரியானது எது? / சரியானவை எவை?

1. a மாத்திரம்
2. b மாத்திரம்
3. c மாத்திரம்
4. a, b ஆகியன மாத்திரம்
5. a, b, c ஆகியன எல்லாம்

அமைப்புக் கட்டுரைவகை வினாக்கள்

1). யாதேனும் பொருளை வெப்பமேற்றுவதால் அதில் நீட்டல் விரிவும் பரப்பளவு விரிவும் கனவளவு விரிவும் ஏற்படும்.

i). ஒரு பொருளின் நீட்டல் விரிவுக் குணகம் (விரிதகவு - α) அதன் பரப்பளவு விரிதகவுக்கும் (β) கனவளவு விரிதகவுக்கும் (γ) இடையிலான தொடர்பை எழுதுக.

.....
.....
.....

ii).



r_0 = 20 cm ஆயின் 30 ^{0}C யில் கோளத்தின் கனவளவு யாது?

.....
.....
.....

iii) 20 cm ஆரையுள்ள உருக்குக் கோளமொன்று 30 ^{0}C யிலிருந்து 130 ^{0}C வரை வெப்பமேற்றப்பட்டதாயின் அதன் புதிய கனவளவைக் காண்க. உருக்கின் நீட்டல் t pwT f FZ f k;(α) = 11 x 10^{-6} $^0C^{-1}$

.....
.....
.....

iv). மேற்படி பகுதி (ii) இன்படி கனவளவு அதிகரிப்பு எவ்வளவு?

.....
.....

v). 130 ^{0}C வரை வெப்பமேற்றிய பின்னர், அதிகரித்த கனவளவைக் கொண்டு, சம கனவளவுள்ள எத்தனை கோளங்களை ஆக்கலாம்?

.....
.....
.....

vi). 30 ^{0}C யில் மேற்படி கோளத்தின் அடர்த்தி 6000 kgm^{-3} ஆயின் 130 ^{0}C யில் அக்கோளத்தின் அடர்த்தியைக் காண்க.

.....
.....
.....

2).



நீரின் ஆவியாதலின் மறைவெப்பம் (L) = 2.27 x 10^6 J / kg
நீரின் தன்மறைவெப்பம் (Cc) = 4200 J / kg^{0}C
கொதிநீராவியின் தன்மறைவெப்பம் (Cs) = 2000 J / kg^{0}C

தொழிற்சாலையொன்றினுள் நிகழும் ஒரு செயன்முறையின்போது ஒரு குறித்த அளவு நீரை ஒரு குறித்த அளவு நேரத்தில் தாழ் வெப்பநிலையிலிருந்து உயர் வெப்பநிலை வரை வெப்பமேற்ற நேர்ந்துள்ளது. அதற்காக நீர் அடங்கியுள்ள பாத்திரத்தினுள் அமிழ்த்தப்பட்டுள்ள செப்புக் குழாய்த் தொகுதியொன்று மேலேயுள்ள படத்தில் காட்டியுள்ளவாறு பயன்படுத்தப்பட்டுள்ளது. குழாய்த் தொகுதியின் A அந்தத்தின் மூலம் கொதிகலனின் துணையுடன், θ_1 உயர் வெப்பநிலையில் உள்ள கொதிநீராவி உட்செல்லத்தக்கதாக அமைக்கப்பட்டுள்ளது. குழாயினுள் கொதிநீராவி ஒடுங்கி, θ_2 வெப்பநிலையில் ($\theta_2 < \theta_1$) உள்ள நீராக மீண்டும் கொதிகலனை அடைகின்றது.

i. மேற்படி பொறியைப் பயன்படுத்தி ஒரு மணித்தியாலத்தில் 10 kg நீரை 25 ^{0}C - 85 ^{0}C வரை வெப்பமேற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு வெப்பமேற்றும் போது அந்நீர் பெறும் வெப்பத்தின் அளவு யாது?

.....

.....

.....

ii. மேற்குறிப்பிட்ட நேரத்துள் கொதிநீராவி வெளிவிட்ட வெப்பத்தின் அளவைக் காண்பதற்குத் தேவைப்படும் மேலதிக தரவு யாது? ஒரு மணி நேரத்துள் குழாயினூடாகச் செலுத்த வேண்டிய கொதிநீராவியின் திணிவு யாது?

.....

.....

.....

iii. ஒரு மணி நேரத்துள் கொதிநீராவி வெளியிட்ட வெப்பத்துக்கான (Q_2) கோவையை மேற்படி குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதிக்காட்டுக. (அக்குழாயினூடாகச் சென்ற கொதிநீராவியின் திணிவு m ஆகும்)

.....

.....

iv. அமிழ்த்தப்பட்டுள்ள செப்புக் கம்பியின் ஊடாகச் செல்லும் கொதிநீராவி 150 ^{0}C யில் உள்ளதாகவும், குழாயில் நீராக ஒடுங்கிய கொதிநீராவி 90 ^{0}C யில் உள்ளதாகவும் கருதி, Q_2 இற்குரிய கோவையை m இல் எழுதிக்காட்டுக.

.....

.....

v. இச்செயன்முறையின்போது செப்புக்குழாயும் பாத்திரமும் உறிஞ்சிய வெப்பம் புறக்கணிக்கப்பட்டத்தக்கதாயின் ஒரு மணி நேரத்தில் வெளியேறிய கொதிநீராவியின் திணிவைக் காண்க.

.....

.....

.....

vi. மேற்படி சந்தர்ப்பத்தில் நீங்கள் மேற்கொண்ட எடுகோள்களைக் குறிப்பிடுக.

.....

.....

3). 910 $Jkg^{-1o}C^{-1}$ தன்வெப்பக் கொள்ளளவுடைய அலுமினியத்தினால் ஆக்கப்பட்ட பாத்திரத்தின் திணிவு 200 g ஆகும். அதனுள் 20 ^{o}C யில் உள்ள 2 kg நீர் அடங்கியுள்ளதோடு, பொறியொன்றினது ஒரு பகுதியைச் சுத்திகரிப்பதற்காக அந்நீரை 60 ^{o}C வரை வெப்பமேற்ற வேண்டியுள்ளது.

i. அலுமினியப் பாத்திரத்தை 20 ^{o}C இலிருந்து 60 ^{o}C வரை வெப்பமேறும்போது அது பெறும் வெப்பத்தின் அளவு யாது? (நீரின் தன்வெப்பக் கொள்ளளவு = 4200 $Jkg^{-1}\,^oC^{-1}$)

.....

.....

.....

ii. மேற்படி பாத்திரத்தில் அடங்கியுள்ள நீரை மாத்திரம் வெப்பமேற்றுவதற்குத் தேவையான வெப்பத்தின் அளவு யாது?

.....

iii. தேவைப்படும் மொத்த சக்தியின் அளவு யாது?

.....

.....

iv. இங்கு மேலதிகமாகத் தேவைப்படும் சக்தியின் அளவானது நீரை மாத்திரம் வெப்பமேற்றுவதற்குத் தேவையான சக்தியின் எத்தனை சதவீதமாகும்?

.....

.....

v. மேற்படி 2 kg நீரை 400 $Jkg^{-1o}C^{-1}$ தன்வெப்பக் கொள்ளளவு கொண்ட சர்வசமனான செப்புப் பாத்திரமொன்றில் இட்டு இக்கருமத்தை நடத்துவோமாயின், மேலதிகமாகச் செலவாகும் சக்தியின் அளவு முன்னரில் குறைவானதா கூடுதலானதா என்பதைக் காரணங் காட்டி விளக்குக.

.....

.....

vi. a) மேற்படி செப்புப் பாத்திரத்தை வெப்பமேற்றுவதற்குச் செலவாகும் வெப்பத்தின் அளவைக் காண்க

b) அது நீரை மாத்திரம் வெப்பமேற்றுவதற்குச் செலவாகும் வெப்பத்தின் எத்தனை சதவீதமாகும்?

.....

.....

4). ஆவியாதலின் தன்மறைவெப்பத்தைத் துணியும் பரிசோதனையொன்றுக்காக ஒரு மாணவன் தயாரித்த உபகரண அமைப்பு கீழே படத்தில் தரப்பட்டுள்ளது.



i. கீழே தரப்பட்ட உபகரணங்களுக்குரிய குறியீடுகளைக் கொண்டு அமைப்பின் பகுதிகளுக்குப் பெயரிடுக.
P - கலோரிமானி
Q - கொதிநீராவிப் பொறி
R - கொதிநீராவிப் பிறப்பாக்கி
S - பன்சன் சுடரடுப்பு

ii. அமைப்பில் A, B ஆகிய குழாய்களின் பயன் யாது?

A.....

B .....

iii. குழாய் B இனது முனை நேரடியாக கலோரிமானியினுள் புகுத்தப்படாது மற்றுமோர் உபகரணத்தின் வழியே செலுத்தப்பட்டுள்ளது. இதற்கான காரணத்தை விளக்குக.

.....

.....

.....

iv. இப்பரிசோதனைக்குரிய ஏனைய அளவீடுகளைப் பெறுவதற்குத் தேவையான உபகரணங்களைக் குறிப்பிடுக.

.....

.....

.....

v. இப்பரிசோதனையில் பெறும் அளவீடுகளை ஒழுங்குமுறைப்படி குறிப்பிடுக.

.....

.....

vi. நீரின் ஆவியாதலின் மறை வெப்பத்தைத் துணிவதற்குத் தேவையான ஏனைய தகவல்கள் யாவை?

.....

.....

vii. இப்பரிசோதனையின் தன்வெப்பப் பரிமாற்றம் தொடர்பான தொடர்பு யாது?

.....

.....

viii. மேற்படி வினா vii இற்குரிய தொடர்பை எழுதும்போது கவனத்திற்கொள்ளப்படும் எடுகோள் யாது?

.....

.....

ix. மேலே படத்தில் காட்டியுள்ளவாறு உபகரணங்களை அமைத்து பரிசோதனையை நடத்தும் போது, மேற்படி எடுகோள்மீது செல்வாக்குச் செலுத்தத்தக்க ஒரு தடையை ஏன் நீக்க நேரிடும்? அத்தடை யாது? அதற்காக நீங்கள் ஆய்கூடத்தில் எடுக்கும் நடவடிக்கையை படத்தில் குறிப்பிட்டுப் பெயரிடுக.

.....

.....

.....

.....

5) $2 \times 10^{-4}\ m^2$ குறுக்குவெட்டுப் பரப்பளவு கொண்ட 50 cm நீளமான உலோகக் கோலொன்றின் வெளிமேற்பரப்பு நன்கு காவலிடப்பட்டுள்ளது. அதன் ஓர் அந்தம் 100 ^{0}C இல் உள்ள ஓர் அறையுடன் தொடுக்கப்பட்டுள்ளதோடு, மறுஅந்தம் 20 ^{0}C யில் உள்ள நீருடன் தொடுகையுறுமாறு வைக்கப்பட்டுள்ளது.



i. நித்தியநிலையில் கோலின் வழியே வெப்பம் பாயும் வீதத்தைக் காண்க. (கோலின் வெப்பக் கடத்தாறு 380 $Wm^{-1}\,^0C^{-1}$)

.....

.....

.....

ii. மேற்படி அமைப்பில் கோலின் வலது பக்க அந்தம் நீருக்குப் பதிலாக உருகும் பனிக்கட்டியினுள் வைக்கப்பட்டுள்ளதாயின், கோலின் வழியே உறுதிநிலையில் வெப்பம் பாயும் விதத்தைக் காண்க.

.....

.....

iii. நீரின் உருகலின் தன் மறைவெப்பம் 330000 J kg^{-1} ஆயின், ஒரு மணி நேரத்தில் உருகும் பனிக்கட்டியின் திணிவு யாது?

.....

.....

.....

iv.



மேற்படி உலோகக்கோலும் சர்வசமமான அளவுகளைக் கொண்ட அலுமினியக் கோலொன்றும் படத்திற் காட்டியுள்ளவாறு இணைக்கப்பட்டு ஓர் அந்தம் 250 ^{0}C இலும், மறு அந்தம் 0 ^{0}C யிலும் வைக்கப்பட்டுள்ளன. (அலுமினியத்தின் வெப்பக் கடத்தாறு 200 $Wm^{-1}{}^0C^{-1}$ ஆகும்)

a). கூட்டுக்கோலின் பொது மூட்டினது வெப்பநிலையைக் காண்க.

.....

.....

.....

b). கூட்டுக்கோலின் வழியே வெப்பம் பாயும் வீதம் யாது?

.....

.....

.....

6). தொழினுட்பவியல் பாடம் பயிலும் மாணவரொருவர் மாறா வெப்பநிலையுள்ள ஓர் அறையை (Incubator) அமைக்கத் திட்டமிடுகிறார். அதன் உட்புற வெப்பநிலையை 40 ^{0}C யில் பேணுதல் அவசியமாகும். வெளிப்புற இடைவெப்பநிலை 25 ^{0}C எனக் கொள்ளப்பட்டுள்ளது. அறையின் உட்புறத்தை வெப்பமேற்றுவதற்காக 100W எனக் குறிக்கப்பட்டுள்ள இழை மின்விளக்குகளைப் பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. அறையின் நீள, அகல, உயரங்கள் முறையே 100, 100, 150 cm ஆகும்.



i. அறையின் மேற்பரப்பளவைக் கணிக்குக.

.....

.....

.....

ii. இந்த அறையின் சுவர்களை அமைப்பதற்காகத் தெரிவுசெய்யும் பொருளில் காணப்பட வேண்டிய முக்கியமான வெப்ப இயல்பொன்றினைக் குறிப்பிடுக.

.....

iii. இந்த அறையை அமைப்பதற்காக 25 சென்ரிமீற்றர் தடிப்புள்ள பலகை பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. ($K_{\text{அரிமரம்}}$= 0.2 $Wm^{-1}K^{-1}$). அறையின் சுவர்களுக்குக் குறுக்காக ஒரு செக்கனில் வெளியே பாயும் வெப்பத்தின் அளவைக் கணிக்குக.

.....

.....

.....

iv. இழைவிளக்கில் குறிக்கப்பட்டுள்ள வலுவின் 50% வெப்பமாக வழங்கப்படுகின்றதெனின், ஒரு செக்கனில் ஒரு மின்குமிழ் வழங்கும் வெப்பத்தின் அளவைக் காண்க.

.....

.....

.....

v. அதற்கமைய பயன்படுத்தவேண்டிய 100 W மின்குமிழ்களின் தொகை யாது? (வேறு முறைகளிலும் ஏறத்தாழ 40 W வலுவுடன் வெப்பம் பாய்வதாக எடுத்துக் கொள்க.)

.....

.....

.....

vi. அறையின் உட்புறச் சுவர்களை ரெஜிபோமினால் மறைப்பிடுவதால், பயன்படுத்த வேண்டிய மின்குமிழ்களின் தொகையைக் குறைக்க முடியுமா என விளக்குக.

.....

.....

.....

7) i. நீட்டல் விரிதகவு என்பது யாது?

ii. $1.9 \times 10^{-5}\ K^{-1}$ நீட்டல் விரிதகவுள்ள பித்தளையினாலான மீற்றர்க்கோலொன்று 0 ^{o}C யில் படிவகுக்கை செய்யப்பட்டுள்ளது. மீற்றர்க்கோல் 30 ^{0}C யில் இருக்கும் போது 1 m எனப் பதிவாகும் அளவீட்டின் உண்மையான நீளம் யாது?

.....

iii. 30 ^{0}C இல் உள்ள அலுமினியம் கோலொன்றினை 30 ^{0}C யில் உள்ள மீற்றர்க் கோலொன்றினால் அளந்தபோது அளவீடு 50 cm எனப் பதிவாகியது. அலுமினியக் கோலின் உண்மை நீளம் யாது?

.....

.....

iii. அலுமினியக் கோலின் வெப்பநிலை 0 ^{0}C வரை குறைக்கப்பட்டது. அலுமினியத்தின் நீட்டல் விரிதகவு $2.5x10^{-5}k^{-1}$ ஆயின் $0^{0}C$ இல் அலுமினியக்கோலின் உண்மை நீளம் யாது?

.....

.....

8). காவலிடப்பட்ட கோலொன்றின் வழியே வெப்பம் கடத்தப்படும்போது வெப்பப் பரம்பலைக் கற்றாய்வதற்காகத் தயாரிக்கப்பட்ட ஆய்கூட அமைப்பொன்று படத்தில் காட்டப்பட்டுள்ளது.



i. இடைவெளிகளில் இடப்பட்டுள்ள துளைகளினுள் வெப்பமானிகளின் குமிழ்பகுதி வைக்கப்பட்டு பன்சன் சுடரடுப்பினால் உலோகக்கோல் வெப்பமேற்றப்படுகின்றது.

a மேற்படி பரிசோதனையமைப்பில் உள்ள பன்சன் சுடரடுப்பை வரைந்து காட்டுக.

b வெப்பமானிகளைத் துளைகளினுள் புகுத்த முன்னர் அத்துளைகளினுள் சிறிதளவு மசகெண்ணெய் இடப்பட்டது. அதற்கான காரணம் யாது?

ii. கோல் நித்தியநிலையை அடைந்துள்ளதா என நீங்கள் எவ்வாறு கண்டறிவீர்கள்.

iii. கோல் நித்தியநிலையை அடைந்த பின்னர் நீங்கள் பெறும் வாசிப்புக்கள் எவை?

iv. நீங்கள் வரையும் வரைபின் அச்சுக்கள் யாவை?

X அச்சு .....

y அச்சு .....

v. நீங்கள் எதிர்பார்க்கும் வரைபை பின்வரும் அச்சுக்களின் மீது வரைந்து காட்டுக.

vi. கோல், காவலிடப்படவில்லையெனின் கிடைக்கும் வரைபைப் பின்வரும் அச்சுக்களின்மீது வரைந்து காட்டுக.

vii. மேற்படி பரிசோதனையின்போது குறிப்பிடப்பட்ட கோலுக்குப் பதிலாக கடத்தாறு குறைவான ஒரு கோல் பயன்படுத்தப்பட்டதாயின், மேற்படி வரைபின் வெப்பநிலைப் படித்திறனுக்கும் (m) புதிய கோலின் வெப்பநிலைப் படித்திறனுக்கும் (m_1) இடையிலான தொடர்பை எழுதிக் காட்டுக.

viii. உலோகக் கோலின் A முனையிலிருந்து முதலாவது வெப்பமானி (P) வரையிலான தூரம் 25 cm உம் Q வெப்பமானி வரையிலான தூரம் 32 cm உம் ஆயின் நித்திய நிலையில் P யினது வாசிப்பு 35 ^{0}C உம் Q இன் வெப்பநிலை 21 ^{0}C உம் ஆயின் கோலின் வெப்பநிலைப் படித்திறன் யாது?

கட்டுரை வினாக்கள்

1. பரப்பளவு விரிதகவு என்பது யாதென வரைவிலக்கணப்படுத்தி, பரப்பளவு விரிதகவுக்கும் நீட்டல் விரிதகவுக்கும் இடையே காணப்படும் தொடர்பைக் கட்டியெழுப்புக. நீட்டல் விரிதகவு $1.2 \times 10^{-5}\ K^{-1}$ கொண்ட சதுரவடிவ உருக்குத் தகடொன்று 0 ^{0}C நிலையின்போது 80 cm பக்க நீளம் கொண்டது. 60 ^{0}C இன் போது அதில் அதிகரிக்கும் பரப்பளவைக் காண்க.
2. நீட்டல் விரிதகவு $2.5 \times 10^{-5}\ K^{-1}$ கொண்ட அலுமினியத் தகடொன்றில், 20 ^{0}C இல் 1 cm ஆரை கொண்ட துளையொன்று உள்ளது. 200 ^{0}C யின் போது இத்துளையின் பரப்பளவைக் காண்க. 1.01 cm ஆரையுள்ள கோளமொன்றை இத்துளையினூடாக செலுத்த வேண்டுமெனின் தகட்டின் வெப்பநிலை எவ்வளவாகவிருத்தல் வேண்டும்
3. நீட்டல் விரிதகவு $1.2 \times 10^{-5}\ K^{-1}$ கொண்ட உலோக நாடாவினால் செய்யப்பட்டுள்ள வண்டிற் சில்லு வளையமொன்றின் ஆரை 44 cm ஆகும். 44.2 cm ஆரை கொண்ட மரத்தாலான சில்லொன்றை இதனுள் புகுத்துவதற்கு உலோக வளையத்தை எவ்வளவு வெப்பநிலை மாற்றத்திற்கு உட்படுத்தல் வேண்டும்?
4. கனவளவு விரிதகவு என்பதை வரைவிலக்கணப்படுத்தி, கனவளவு விரிதகவு மற்றும் நீட்டல் விரிதகவு என்பவற்றிக்கிடையிலான தொடர்பைக் கட்டியெழுப்புக. நீட்டல் விரிதகவு 2.5 X கொண்ட அலுமினியத்தால் செய்யப்பட்ட கனமானக் குடுவையொன்றில் உட்கனவளவு 20 ^{0}C இல் 1 l ஆகும். 100 ^{0}C யின்போது அதன் உட் கனவளவைக் காண்க.

5. நீட்டல் விரிதகவு $1.2 \times 10^{-5} K^{-1}$ கொண்ட உருக்கினால் செய்யப்பட்ட கனமானக் குடுவையொன்றின் கொள்ளளவு $0\ ^0C$ ல் $2\ l$ ஆகும். ஒவ்வொரு வெப்பநிலையிலும் மாற்றமடையாத வெறும் வெளியை வைத்திருப்பதற்காகப் பாத்திரத்தினுள் இட வேண்டிய நீட்டல் விரிதகவு $2.5 \times 10^{-5} K^{-1}$ கொண்ட அலுமினியக் குற்றியின் கனவளவைக் காண்க.

6. வெப்பக் கடத்தல் வீதத்தில் தாக்கஞ் செலுத்தும் காரணிகள் எவை? யாதேனும் திரவியத்துக்கான வெப்பக் கடத்தாறுக்குரிய சமன்பாட்டை எழுதி அதன் உறுப்புக்களை அறிமுகஞ் செய்க. எந்த நிபந்தனைகளின் கீழ் இச்சமன்பாடு உண்மையாகும்?

7. 12 cm தடிப்பான, செங்கல் சுவர் கொண்ட அறையொன்றின் வெளி வெப்பநிலை $30\ ^0C$ யும், உள் வெப்பநிலை $20\ ^0C$ யும் ஆகும். செங்கல்லின் வெப்பக் கடத்தாறு $0.48\ Wm^{-1} K^{-1}$ எனின் சுவரின் $1\ m^2$ ஊடாக ஒரு நிமிடத்துள் செல்லும் வெப்பத்தின் அளவைக் கணிக்குக. இவ்வாறு வெப்பமடைதலை இழிவாக்குவதற்காக சுவரின் உட்பரப்பில் 2.5 cm தடிப்பான, $0.14\ Wm^{-1} K^{-1}$ வெப்பக் கடத்தாறு கொண்ட பலகை மறைப்பு இடப்படின் செங்கல் - பலகை இடப்பட்ட பகுதியில் $1\ m^2$ ஊடாக ஒரு நிமிடத்துள் செல்லும் வெப்ப அளவைக் கணக்கிடுக.

8. நீராவிக் கொதிகலன் ஒன்றின் அடித்தளத்தின் தடிப்பு 1.2 cm உம் கீழ் தளப்பரப்பு $1\ m^2$ உம் M F k; mJ $48\ Wm^{-10}C^{-1}$ வெப்பக் கடத்தாறு கொண்ட உலோகத்தால் செய்யப்பட்டுள்ளது. அது நிமிடத்திற்கு 1 kg வீதம் வளிமண்டல அமுக்கம் l இன் கீழ் நீராவியை உற்பத்தி செய்கிறது. கொதிகலனின் கீழ்ப்புற அடிப்பரப்பின் வெப்பநிலையைக் காண்க. (நீரின் ஆவியாதலின் தன்மறைவெப்பம் $2.26 \times 10^6 Jkg^{-1}$) சுவாலையின் வெப்பநிலையும் அதே அளவாகவே இருத்தல் வேண்டுமா? விளக்கம் தருக.

   நீண்ட நாட்கள் பயன்படுத்திய பின்னர் கொதிகலனின் உட்புற அடித்தளப் பரப்பில் $0.8\ Wm^{-1}K^{-1}$ அளவு வெப்பக் கடத்தாறு கொண்ட 2 mm தடிப்பான உப்புப்படையொன்று படிந்தது. எனினும், முன்னைய வீதத்திலேயே நீராவி உற்பத்தி செய்யப்படும்போது கொதிகலனின் கீழ் அடிப்பரப்பின் வெப்பநிலையைக் கணக்கிடுக. இரண்டு படைகளதும் இடைமுகப்பின் வெப்பநிலையைக் காண்க.

9. துவிச்சக்கர வண்டியில் ஐஸ்கிறீம் விற்பனை செய்யும் ஒருவரது ஐஸ்கிறீம் பெட்டி 50 cm பக்க நீளங் கொண்ட சதுரமுகியாகும். அது 4 cm தடிப்பான $0.4\ Wm^{-1} K^{-1}$ அளவு வெப்பக் கடத்தாறு கொண்ட திரவியத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது. பெட்டியுள் 0^0C இல் உள்ள 10 kg ஐஸ்கிறீம் காணப்படின், சூழல் வெப்பநிலை $34\ ^0C$ உள்ள நாளொன்றில், முழு ஐஸ்கிறீமும் கரைந்து செல்வதற்கு எவ்வளவு நேரமெடுக்கும்? (ஐஸ்கிறீமின் உருகலின் தன்மறைவெப்பம் $3.4 \times 10^5\ J\ kg^{-1}$ உம் கரைந்த பிறகு தன்வெப்பக் கொள்ளளவு $4200\ J\ kg^{-1} K^{-1}$ உம் ஆகும்.)

10. மதுசார உற்பத்திக்காகப் பயன்படுத்தும் ஓர் அமைப்பில் உள்ள, உள் ஆரை 5 mm உம் வெளி ஆரை 6 mm உம் கொண்ட, $380\ Wm^{-1}K^{-1}$ வெப்பக்கடத்தாறு உடைய 6 m நீளமான செப்புக் குழாயின் 6 m நீளமான பகுதி பனிக்கட்டி கலந்த நீரில் அமிழ்த்தப்பட்டுள்ளது. குழாயின் ஊடாகப் பாயும் மதுசார ஆவி $78\ ^0C$ வெப்பநிலையுடைய திரவமாக குழாயிலிருந்து வெளிவரும். மதுசாரத்தின் கொதிநிலையும் ஆவியாதலின் தன்மறைவெப்பமும் முறையே $78\ ^0C$ உம், $8.6 \times 10^5\ J\ kg^{-1}$ உம் பனிக்கட்டியின் உருகலின் தன்மறைவெப்பம் $3.4 \times 10^5\ J\ kg^{-1}$ உம் ஆயின்

    1. குழாயின் சுவரின் ஊடாக வெப்ப இழப்பு ஏற்படும் வீதத்தைக் கணிக்க.

    2. குழாயின் வெளிவெப்பநிலை $0\ ^0C$ யிலேயே பேணப்படுமாயின் ஒரு நிமிடத்தில் கரையும் பனிக்கட்டியின் திணிவைக் கணக்கிடுக.

    3. ஒரு நிமிடத்தில் திரவ நிலையடையும் மதுசாரத்தின் திணிவைக் கணக்கிடுக.

11. i. வெப்பக் கடத்தாறு என்றால் என்ன?

    ii. ஒரு உலோகப் பாத்திரம் $1 \text{ X } 10^2 \text{ Wm}^{-1} \text{K}^{-1}$ வெப்பக் கடத்தாறு கொண்ட உலோகத்தால் செய்யப்பட்டுள்ளது. அதன் அடித்தளத் தடிப்பு 1 cm உம் ஆரை 7 cm உம் ஆகும். பாத்திரத்தில் காணப்படும் நீர் $80\,^0\text{C}$ மாறிலி வெப்பநிலையில் நித்திய நிலையில் காணப்படுகிறது. பாத்திரம் 1000 W வெப்ப மூலகம் ஒன்றின் மீது வைக்கப்பட்டிருப்பட்டுள்ளது. அதற்கு எவ்வித இழப்புமின்றி வெப்ப மூலகத்தினால் வழங்கப்படும் வெப்பம் அடியினூடாகச் செல்லுமாயின் கீழ் அடித்தளத்தின் வெப்பநிலையைக் கணிக்குக.

    iii. அடித்தளத்தின் தடிப்பு 3 cm எனின், கீழ் அடித்தளப் பரப்பின் வெப்பநிலை யாது?



12. குளியலறையொன்றுக்கு வெந்நீர் பெறுவதற்காக, தொழினுட்பவியல் பயிலும் மாணவரொருவர் ஆக்கிய அமைப்பு படத்தில் காட்டப்பட்டுள்ளது. குழாயின் வழியே பாயும் நீர் ஓர் அறையில் சேகரிக்கப்பட்டு அமிழ்ப்பு வெப்பமாக்கி மூலம் வெப்பமேற்றப்படும். அறையினுள் புகும் நீரின் வெப்பநிலை $20\,^0\text{C}$ ஆகும். $38\,^0\text{C}$ யில் உள்ள நீரே தேவைப்படுகின்றது. அமைப்பில் 1000 W அமிழ்ப்பு வெப்பமாக்கியொன்று பயன்படுத்தப்பட்டுள்ளதாயின், 38^0C யில் காணப்படும் வெந்நீரைப் பெறத்தக்க வீதத்தைக் காண்க.
    [நீரின் தன்வெப்பக் கொள்ளளவு $4200 \text{ J kg}^{-1}\,^0\text{C}$ எனவும் பாத்திரத்தில் வெப்ப இழப்பு ஏற்படுவதில்லை எனவும் கொள்க.]

பல்தேர்வு - வினாக்களுக்கான விடைகள்

1. **விடை** 4 $\beta = 2\alpha,\ r = 3\alpha$ ஆதலால்

2. **விடை** 1

$$A_2 = A_1(1+2\alpha\theta)$$
$$= 1\left(1+5\times10^{-5}\times20\right)$$
$$= 1(1+0.001)$$
$$= 1.001cm^2$$

3. **விடை** 3

$$d_2 - d_1(1+\alpha\theta)$$
$$d_2 - d_1 = d_1\alpha\theta$$
$$\frac{d_2 - d_1}{d_1\alpha} = \theta$$
$$\frac{4.02-4}{4\times1.9\times10^{-5}} = \theta$$
$$\frac{0.02\times10^5}{4\times1.9} = \theta$$
$$\underline{\underline{264\ ^oC = \theta}}$$

4. **விடை** 2

துளைகளுக்கிடையிலான இடைவெளிக்கு $l_2 = l_1(1+\alpha\theta)$ ஐப் பிரயோகிக்கலாம். அப்போது தூரம் $= x(1+\alpha\theta)$

5. **விடை** 2

பாத்திரத்தின் விரிவு $V_g r_g\theta \rightarrow (1)$

பாத்திரத்தின் விரிவு $V_m r_m\theta \rightarrow (2)$

மேற்படி தேவைக்காக (1)=(2) ஆதல் வேண்டும்.

$$V_g r_g\theta = V_m r_m\theta$$
$$\frac{V_g}{V_m} = \frac{r_m}{r_g}$$

6. **விடை** 5 திரவத்தின அடர்த்தியானது கோளத்தின் அடர்த்தியை விடத் துரிதமாகக் குறைவடைவதால் கோளத்தின் மையம் கீழ்நோக்கிச் செல்லும்.

7. **விடை** 3

8. **விடை** 2

இங்கு பதார்த்தத்தின் விரிவு = திரவியத்தின் விரிவு

$$V\times3\alpha\theta = V'\gamma\theta$$
$$\frac{V3\alpha\theta}{\gamma} = V'$$

9. **விடை** 4

$Q = mc\theta$ இன் படி,

முதலாவது சந்தர்ப்பம்

$$mc(90-60) = m_w c_w (60-30)$$
$$mc = m_w c_w \quad \rightarrow (1)$$

இரண்டாவது சந்தர்ப்பம்.

$$\frac{m}{2} c\left(90-\theta\right) = m_w c_w \left(\theta - 30\right) \quad \rightarrow (2)$$

$\frac{(2)}{(1)}$ இல் $\frac{90-\theta}{2} = \theta - 30$

$$90-\theta = 2\theta - 60$$
$$150 = 3\theta$$
$$\underline{\underline{50\ ^oC = \theta}}$$

10. **விடை** 2

$$m_A C_A = m_B C_B$$
$$2000\ V\ \ C_A = V \times 4200 \times 1000$$
$$C_A = \frac{4200}{2}$$
$$= 2100\ Jkg^{-1}K^{-1}$$

11. **விடை** 1

$$Q = mc\theta$$
$$c = \frac{Q}{m\theta}$$

12. **விடை** 2

$$Q = mc\theta$$
$$\frac{Q}{t} = mc\frac{\theta}{t}$$
$$\frac{Q}{t}\ \alpha\ \frac{\theta}{t}$$

13. **விடை** 3 A.B ஆகிய கூற்றுக்கள் சரியானவை எனக் கொள்ளலாம். பாத்திரமும் வெப்பத்தைப் பெறுகின்றமையால் C தவறானது.

14. **விடை** 3

$$\frac{Q}{t} = KA\frac{(\theta_1 - \theta_2)}{l}$$
$$K_1 A\frac{(105-100)}{2} = K_2 A \quad \frac{(100-30)}{4}$$
$$\frac{K_1}{K_2} = 7$$

15. **விடை** 5

16. **விடை** 5 திரவியத்தின்மீது தாங்கியானது ஒரு மாறிலியாகும்.

$\left\{\alpha = \Delta\ell \big/ \ell o \Delta\theta\right\}$

17. **விடை** 2

$\Delta\ell = \alpha\ell.\Delta\theta$

$1.1\times10^{-3} = 1.1\times10^{-5}\times10\times(27-\theta)$

$\theta = 17^{o}C$

18. **விடை** 4 $(2\alpha = \beta)$ ஆதலால்.

19. **விடை** 3

20. **விடை** 5

21. **விடை** 1

$(1) => \Delta\ell_1 = \alpha_1\ell_1\Delta\theta$

$(2) => \Delta\ell_2 = \alpha_2\ell_2\Delta\theta$

$\Delta\ell_1 = \Delta\ell_2 \rightarrow \alpha_1\ell_1\Delta/\theta = \alpha_2\ell_2\Delta\theta$

$\alpha_1\ell_1 = \alpha_2\ell_2$



22. **விடை** 4 $\left[\gamma_x = \gamma_{\varepsilon\gamma} + 3\alpha\right]$

23. **விடை** 1

$\Delta v = \gamma v 1\Delta\theta$

$3\alpha = \left(\frac{\Delta v}{v_1}\right)_{\Delta\theta}$

$\alpha = \frac{0.033}{3\times10} = 0.0011^{o}C^{-1}$

24. **விடை** 3

$Q = ms\theta$

$= 10\times10^{-3}\times4200\times25$

$= 1050\ J$

25. **விடை** 1

26. **விடை** 5

$Q = ms\theta = 2\times470\times60$

$= 56400$

$= \underline{\underline{5.64\times10^{4}\ J}}$

27. **விடை** 3

Q = mL

$= 4 \times 2.26 \times 10^{6} = 9.04 \times 10^{6}$ J

28. **விடை** 1



$$Q = mc\theta + mL$$
$$= m(c\theta + L)$$
$$= 16.5(230 \times 941 + 8.8 \times 10^4)$$
$$= 5.02 \times 10^6 J$$

29. **விடை** 3
30. **விடை** 2
31. **விடை** 3
32. **விடை** 1

$$q/t \ \alpha \ (\theta_1 - \theta_2)$$
$$q/t \ \alpha \ A$$
$$q/t \ \alpha \ 1/l$$
$$q/t \ \alpha \ \frac{A(\theta_1 - \theta_2)}{l}$$

33. **விடை** 2

A இனது அலகு = m^2

$\theta_1 - \theta_2$ இனது அலகு = °C உம்

l இனது அலகு = m உம்

$\frac{Q}{t}$ இனது அலகு = W உம் ஆதலால்

34. **விடை** 5 $\frac{Q}{t} = \frac{KA(\theta_1 - \theta_2)}{l} = 200 \times \left(\pi \times 1 \times 10^{-4}\right) \times \left(\frac{360-10}{0.4}\right) = 55 \text{ W}$
35. **விடை** 5
36. **விடை** 1

$$\frac{Q}{t} = \frac{KA(Q_1 - Q_2)}{l}$$
$$= \frac{0.84 \times 3 \times 20}{0.5 \times 10^{-2}}$$
$$= 10080 \ J/S$$

ஒரு மணித்தியாலத்தில் $= 10080 \times 60^2$

37. **விடை** 4 அறை வெப்பநிலை > உடல் வெப்பநிலை
உலோகம் அரிமரம் → திசையில் வெப்பம் பாயும்
38. **விடை** 5
39. **விடை** 5

அமைப்புக் கட்டுரைவகை வினாக்களுக்கான விடைகள்

1) i. $\beta = 2\alpha$

$\gamma = 3\alpha$

ii. $V_0 = \frac{4}{3}\pi(20\times10^{-2})^3 = \frac{4}{3}\times\frac{22}{7}\times(0.2)^3 = 0.0334\ m^3$

iii. $V^1 = V_0(1+3\alpha\Delta\theta)$

$= (0.034)(1+3\times11\times10^{-6}(130-30)$

$= 0.0335m^3$

iv. கனவளவு அதிகரிப்பு $\Delta V = V_1 - V_0$

$= 0.0335\ m^3 - 0.0334\ m^3 = 0.0001\ m^3$

$= 100\ cm^3$

v. ஆக்கக்கூடிய உலோகக் கோளங்களின் தொகை $= \frac{33500cm^3}{100cm^3}$

$= 335$

vi. $\rho_0 = \rho^1(1+\gamma\Delta\theta)$

$6000 = \rho^1(1+33\times10^{-6}\times100)$

$\rho^1 = \frac{6000}{(1.0033)}$

$=5980.2\ kg/m^3$

2). i) $Q1 = ms\Delta\theta$

$=10\times4200\times(85\text{-}25)$

$=2.52\times10^6\ J$

ii) கொதிநீராவியின் வெப்பநிலை

iii.) [Q_2= கொதிநீராவியை θ_1 இலிருந்து 100 ^{0}C வரை குறைவடையும்போது வெளியேறிய வெப்பம் + 100^{0}C யில் உள்ள கொதிநீராவி 100 ^{0}C இல் உள்ள நீராக மாறும்போது, மறைவெப்பம் +100^{0}C யில் உள்ள நீர் θ_2 ^{0}C இல் உள்ள நீராக மாறும்போது வெளியேறும் வெப்பம்]

$Q_2 = mc_s(\theta_1\text{-}100)+mx2.27x10^6+mc_l(100\text{-}\theta_2)$

(iv) Q_2 = m x 2000(150-100) + m x 2.27 x 10^6 + m x 4200(100-90)

Q_2 = 2.412 x 10^6 Jm

(v). $Q_1 = Q_2$

2.52 x 10^6 = 2.412 x 10^6 m

m = 1.05 kg

vi) நீர் பெற்ற வெப்பம் = கொதிநீராவி வெளியேற்றிய வெப்பம்

3). i. $\Delta Q_1 = ms\Delta\theta$

$= 0.2 \times 910 \times (60 - 20)$

$= 7280\ J$

ii. $\Delta Q_2 = ms\Delta\theta$

$= 2 \times 4200 \times (60 - 20)$

$= 3.36 \times 10^5\ J$

iii. $Q = \Delta Q_1 + \Delta Q_2$

$= (7280 + 3.36 \times 10^5)\ J$

$= 343280\ J$

$= 343.28\ KJ$

iv. $\frac{\Delta Q_1}{\Delta Q_2} \times 100 = \frac{7280}{3.36 \times 10^5} \times 100 = 2.2\%$

v. காரணம்: செப்பின் தன்வெப்பக் கொள்ளளவானது அலுமினியத்தின் தன்வெப்பக் கொள்ளளவை விடக் குறைவானதாகையால், தேவைப்படும் மேலதிக சக்தியின் அளவு குறைவானது.

4). $\left[Q = ms\theta, m/\theta \text{ மாறிலி எனின் } S \downarrow \rightarrow Q \downarrow \right]$

vi. a). $\Delta Q_3 = 0.2 \times 400 \times (60 - 20)$

$= 3200\ J$

b). $\frac{\Delta Q_3}{\Delta Q_1} \times 100 = \frac{3200}{3.36 \times 10^5} \times 100 = \frac{32}{33.6} = 0.95\%$

i. i.



ii. A - கொதிநீராவி பிறப்பாக்கியினுள் அமுக்கம் அதிகரிப்பதைத் தவிர்ப்பதற்காக
B - உற்பத்தியாகும் கொதிநீராவியைக் கலோரிமானிக்குக் கொண்டு செல்வதற்காக

iii. B இல் ஒடுங்கிய நீர், கலோரிமானியில் உள்ள நீருடன் கலப்பதைத் தவிர்ப்பதற்காக

iv. (1) வெப்பமானி (2) முத்துலா / நான்கு துலாத்தராசு

v. 1. வெறுங் கலோரிமானியின் திணிவு
2. நீருடன் கலோரிமானியின் திணிவு
3. நீரின் ஆரம்ப வெப்பநிலை

4. தொகுதியின் இறுதி வெப்பநிலை
5. கொதிநீராவியைச் செலுத்திய பின்னர், அடங்கியுள்ளவற்றோடு, கலோரிமானியின் திணிவு

vi. 1. கலோரிமானி ஆக்கப்பட்டுள்ள திரவியத்தின் தன் வெப்பக்கொள்ளளவு
2. நீரின் தன்வெப்பக் கொள்ளளவு

vii. கொதி நீராவி வெளிவிட்ட வெப்பம் = நீர் + கலோரிமானி பெற்ற வெப்பம்

viii. சூழலுடன் வெப்பப் பரிமாற்றம் நிகழுவதில்லை

ix. பன்சன் சுடரடுப்பினால் வெளிவிடப்படும் வெப்பம், கதிர்ப்பு மூலம் கலோரிமானியை வந்தடையலாம். இது இறுதிவெப்பநிலை அளவீட்டில் செல்வாக்குச் செலுத்த இடமுண்டு. இதற்காக, கொதிநீராவி பிறப்பாக்கிக்கும் கலோரிமானித் தொகுதிக்கும் இடையே கன்னார்த் திரை வைக்கப்படும்.

5) i. $\frac{Q}{t} = \frac{KA(\theta_1 - \theta_2)}{l} = \frac{380 \times 2 \times 10^{-4} \times (100-20)}{50 \times 10^{-2}} = 12.16 \text{ W}$

ii. $\frac{Q}{t} = \frac{380 \times 2 \times 10^{-4} \times 100}{50 \times 10^{-2}} = 15.2 \text{ W}$

iii. $\frac{Q}{t} = \frac{mL}{60 \times 60}$

$15.2 = \frac{m \times 330000}{3600}$

$m = 0.165 \text{ kg}$

iv.



(a) செப்பு $\Rightarrow \frac{q}{t} = KA\frac{(\theta_1 - \theta_2)}{l} = K_{cu}\, A\frac{(250-\theta)}{l}$

அலுமினியம் $\Rightarrow \frac{q}{t} = K_{Al} A \frac{(\theta - 0)}{l}$

நித்திய நிலையில் $K_{cu} \times \frac{A(250-\theta)}{l} = K_{Al}\frac{A(\theta-0)}{l}$

$\theta = \frac{250K_{cu}}{K_{Al} + K_{cu}} = \frac{250 \times 380}{380 + 200}$

$= 163.8\,^0C$

(b) $\frac{Q}{t} = 380 \times 2 \times 10^{-4}\left[\frac{250 - 163.8}{1}\right]$

$\frac{Q}{t} = 6.55 \text{ W}$

6) i. மேற்பரப்பளவு = A

$A = 2\,[(1\text{m} \times 1\text{m}) + (1\text{m} \times 1.5\text{m}) + (1\text{m} \times 1.5\text{m})$

$= 2\,[\,1 + 1.5 + 1.5)\,\text{m}^2 = 8\,\text{m}^2$

ii. வெப்பக் கடத்தாறு குறைவான ஒரு திரவியத்தைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

iii. $\frac{Q}{t} = K A \left(\frac{\theta_2 - \theta_1}{d} \right)$

$\frac{Q}{t} = 0.2\ \text{W m}^{-1}\ \text{K}^{-1} \times 8\text{m}^2 \left(\frac{40 - 25\text{K}}{0.025\text{m}} \right)$

$\frac{Q}{t} = 0.2 \times 8 \times \frac{15}{0.025}\ \text{W}$

$\frac{Q}{t} = 2 \times 8 \times \frac{15}{0.25}\ \text{W} = 2 \times 8 \times \frac{1500}{25} \times \text{W}$

$\frac{Q}{t} = 960\ \text{W}$



iv. $100\,\text{W} \times \frac{50}{100} = 50\,\text{W}$

v. வெளிவிடப்படும் மொத்தச் சக்தி வலு = 960 W + 40 W

= 1000 W

$= \frac{1000\,W}{50\,W}$ = 20 மின்குமிழ்கள்

vi. ரெஜிபோம் வெப்பக் கடத்தாறு குறைவான ஒரு திரவியமாதலால், வெப்பம் வெளியே பாய்வது மேலும் குறைவடையும். எனவே, பயன்படுத்தவேண்டிய மின் குமிழ்களின் தொகையைக் குறைத்து மின்சக்தியை மீதப்படுத்தலாம்.

7) நீட்டல் விரிதகவு என்பது அலகு வெப்பநிலை அதிகரிப்பின் போது திண்மப் பொருளொன்றின் நீளத்தில் ஏற்படும் பின்ன அதிகரிப்பாகும்.

(i) $l_2 = l_1(1 + \alpha\theta)$

$= (1 + 1.9 \times 10^{-5} \times 30)$

$= (1 + 5.7 \times 10^{-4})$

$= 1.00057$ m

(ii) $= \frac{1.00057}{\cancel{100}_2} \times \cancel{50}$

$= 0.500285$ m

(iii) $l_2 = l_1(1 - \alpha\theta)$

$l_2 = 0.5003(1 - 2.5 \times 10^{-5} \times 30)$

$= 0.5003(1 - 7.5 \times 10^{-4})$

$= 0.5003(1 - 0.00075)$

$= 0.5003 \times 0.99925$

$l_2 = 0.4999$ m

8) i. (a)



(b) வெப்பமானிக் குமிழை கோலின் வெப்பநிலையை அடையச் செய்ய முடியுமாதலால்

ii. வெப்பமானிகளின் வாசிப்புக்கள் மாறாப் பெறுமானத்தை அடைந்துள்ளதா என்பதைச் சோதிப்பதன் மூலம்

iii. 1. வெப்பமானியின் வாசிப்பு

2. A முனையிலிருந்து அந்தந்த வெப்பமானி வரையிலான தூரம்.

iv. X நீளம் (A யிலிருந்து)

Y வெப்பநிலை.

v.



vi. $m > m.$

vii. $m = \frac{\theta_1 - \theta_2}{l_1 - l_2} = \frac{35-21}{32-25} = \frac{14}{7} = 2\ {}^{0}C\ cm^{-1}$

கட்டுரை வகை வினாக்களுக்கான விடைகள்

1. அலகு வெப்பநிலை அதிகரிப்பின் மூலம் திண்மப் பொருளொன்றின் மேற்பரப்பளவில் ஏற்படும் அதிகரிப்பே பரப்பளவு விரிதகவு ஆகும்.



தகட்டின் நீட்டல் விரிவுக்கான

$$a_2 = a_1(1+\alpha\theta) \quad \rightarrow (1)$$

$$b_2 = b_1(1+\alpha\theta) \quad \rightarrow (2)$$

(1) × (2) இல் $a_2b_2 = a_1b_1(1+\alpha\theta)^2$

$A_2 = A_1[1+2\alpha\theta+\alpha$ இன் அடுக்கு (அது 0 ஆகும்)] $\rightarrow (3)$

பரப்பளவு விரிவுக்கான

$$A_2 = A_1(1+\beta\theta) \quad \rightarrow (4) \text{ කෙ}$$

(3)=(4) இல் $1+\beta\theta = 1+2\alpha\theta$

$$A_2 - A_1 = \beta A_1 \theta = 2\alpha A_1\theta$$

$$= 80\times80\times2\times1.2\times10^{-5}\times60$$

$$= 64\times14.4\times10^{-2}\,cm^2$$

$$= \underline{\underline{9.22\,cm^2}}$$

2. i.

ii. துளையின் விரிவைக் கருதினால்

$$A_2 = A_1(1+2\alpha\theta)$$

$$\pi r_2^{\,2} = \pi r_1^{\,2}(1+2\alpha\theta)$$

$$(1.01)^2 = 1^2(1+2\times2.5\times10^{-5}\theta)$$

$$1.0201 = 1+5\times10^{-5}\theta$$

$$\theta = \frac{0.0201}{5\times10^{-5}}$$

$$= \underline{\underline{400\ ^oC}}$$

$$A_2 = A_1(1+2\alpha\theta)$$

$$= \frac{22}{7}\times1^2(1+2\times2.5\times10^{-5}\times180)$$

$$= \frac{22}{7}(1+0.009)$$

$$= \frac{22}{7}\times1.009 = \underline{\underline{3.168\,cm^2}}$$

3. $\pi r_2^2 = \pi r_1^2(1+2\alpha\theta)$

$$\frac{(44.2)^2}{(44)^2} = 1+2\times1.2\times10^{-5}\theta$$

$$379.6^oC = \theta$$

4. அலகு வெப்பநிலை அதிகரிப்பின்போது பதார்த்தமொன்றின் கனவளவில் நிகழும் பின்ன அதிகரிப்பே கனவளவு விரிதகவு எனப்படும்.

நீட்டல் விரிதகவைக் கருதி



$a_2 = a_1(1+\alpha\theta) \quad \rightarrow (1)$

$b_2 = b_1(1+\alpha\theta) \quad \rightarrow (2)$

$c_2 = c_1(1+\alpha\theta) \quad \rightarrow (3)$

$a_2b_2c_2 = a_1b_1c_1(1+3\alpha\theta+\alpha$ இன் உயர் அடுக்கு

α இன் உயர் அடுக்குகளைக் கருதமுடியுமாதலால்

$a_2b_2c_2 = a_1b_1c_1(1+3\alpha\theta)$

$V_2 = V_1(1+3\alpha\theta) \quad \rightarrow (4)$

கனவளவு விரிவைக் கருதுவதால்.

$V_2 = V_1(1+\gamma\theta) \quad \rightarrow (5)$

(4)=(5) இல் $1+3\alpha\theta = 1+\gamma\theta$

$$\underline{\underline{\gamma = 3\alpha}}$$

$V_2 = V_1(1+3\alpha\theta)$

$V_2 = 1\ l\ (1+3\times2.5\times10^{-5}\times80)$

$V_2 = 1+0.006$

$= \underline{\underline{1.006\ l}}$

5. பாத்திரத்தினதும் அறையினதும் அதிகரிக்கும் கனவளவு சமமாதல் வேண்டும்

பாத்திரத்தில் அதிகரிக்கும் கனவளவு $\Delta V = V\times3\alpha\theta$

அறையில் அதிகரிக்கும் களவளவு $\Delta V = V'\times3\alpha'\theta$

$V\times3\alpha\theta = V'\times3\alpha'\theta$

$\frac{V\times\alpha}{\alpha'} = V'$

$V' = \frac{2\times1.2\times10^{-5}}{2.5\times10^{-5}}$

$= \frac{24}{25}$

$= \underline{\underline{0.96l}}$



6. வெப்பநிலைப் படித்திறன் குறுக்கு வெட்டுப் பரப்பளவு, திரவியம்

$$Q/t = KA\frac{(\theta_1 - \theta_2)}{l} \quad \text{இன்படி} \qquad \Rightarrow K = \frac{Q/t}{A\left(\frac{\theta_1 - \theta_2}{l}\right)}$$

Q/t = அலகு நேரத்தில் பாயும் வெப்பம்.

$\left(\frac{\theta_1 - \theta_2}{l}\right)$ = வெப்பநிலைப் படித்திறன்

A = குறுக்கு வெட்டுப் பரப்பளவு
காவலிடப்பட்ட கோல் (அச்சுப் பாய்ச்சலில்) நித்தியநிலையில்

7. $$Q/t = KA\frac{(\theta_1 - \theta_2)}{l}$$
$$= 0.48 \times 1\frac{(30-20)}{12\times10^{-2}}$$
$$= 4 \times 10$$
$$= 40\ w$$



ஒரு நிமிடத்தில் பாயும் வெப்பம். = 40 × 60 J
= 2400 J

I. $$Q/t = K_1A\frac{(\theta_1 - \theta_2)}{l_1} = K_2A\frac{(\theta_2 - \theta_3)}{l_2}$$
$$= 4(30-\theta) = \frac{0.14(\theta-20)}{0.025}$$
$$= 4(30-\theta) = \frac{140}{25}(\theta-20)$$
$$= 300 - 10\theta = 14\theta - 28\theta$$
$$580 = 28\theta$$
$$\frac{580}{28} = \theta$$
$$20.71^oC = \theta$$



II. $$\frac{Q}{t} = \frac{0.48(30-20.71)}{0.12}$$
$$= 4 \times 9.29$$
$$= 37.16 \text{ W}$$

8. $A = 1m^2$

$l = 1.2 \times 10^{-2} m$

$\frac{q}{t} = KA\frac{(\theta_1 - \theta_2)}{l}$

$mL = 48 \times 1 \frac{(\theta - 100)}{1.2 \times 10^{-2}}$

$\frac{1 \times 2.26 \times 10^6}{60} = \frac{48(\theta - 100)}{12 \times 10^{-3}}$

$\frac{2.26 \times 10^3}{4 \times 60} = \theta - 100$

$9.42 + 100 = \theta$

$\theta = \underline{\underline{109.42\ ^oC}}$



சலாகையின் வெப்பநிலை அதுவாகவே இருக்க வேண்டியதில்லை. அடியின் வெப்பநிலையானது அடியின் தடிப்பு, வெப்பக் கடத்தாறு ஆகியவற்றினாலேயே தீர்மானிக்கப்படும்.

ii. $\frac{Q}{t} = KA\frac{(\theta_1 - \theta_2)}{\ell}$

$mL = K_1 \frac{(\theta_1 - 100)}{\ell_1} = K_2 \frac{(\theta_2 - \theta_1)}{\ell_2}$

$\frac{1 \times 2.26 \times 10^6}{60} = 0.8 \frac{(\theta_1 - 100)}{2 \times 10^{-3}} = 48 \frac{(\theta_2 - \theta_1)}{1.2 \times 10^{-2}}$

$\frac{1 \times 2.26 \times 10^6}{60} = \frac{0.8(\theta_1 - 100)}{2 \times 10^{-3}}$

$\frac{2260}{24} = \theta_1 - 100$

$\theta_1 = 194.16$

$4.8(\theta_1 - 100) = 48(\theta_2 - \theta_1)$

$\theta_1 - 100 = 10\theta_2 - 10\theta_1$

$11\theta_1 - 10\theta_2 = 100 \quad \rightarrow (1)$



(1) இல் பிரதியீடு செய்வதால்.

$11 \times 194.16 - 10\theta_2 = 100$

$\theta_2 = \frac{2036}{10}$

$= \underline{\underline{203.6\ ^oC}}$

9. (i) $\theta_1 = 34,\ \ \theta_2 = 0$

$K = 0.4$

$A = 0.5 \times 0.5 \times 6$

$= 1.5\, m^2$



$$\frac{Q}{t} = KA\frac{(\theta_1 - \theta_2)}{\ell}$$

$$\frac{mL}{t} = 0.4 \times 1.5 \times \frac{34}{4 \times 10^{-2}}$$

$$\frac{10 \times 3.4 \times 10^5}{t} = \frac{4 \times 15 \times 34}{4}$$

$$\frac{10 \times 3.4 \times 10^5}{4 \times 15 \times 34} = t$$

$$\frac{20000}{3 \times 60} = t$$

t = 2 மணி 45 நிமிடம்

(ii) சூழல் வெப்பநிலையை அடைவதற்கு நீண்ட நேரம் செல்லும்.

10. 1. $K = 48$

$A = \pi\gamma\ell$

$A = 2 \times \frac{22}{7} \times 5.5 \times 10^{-3} \times 6$

$A = \frac{44}{7} \times 55 \times 6 \times 10^{-4}$



$$\frac{Q}{t} = KA\frac{(\theta_1 - \theta_2)}{\ell}$$

$$= 48 \times \frac{44}{7} \times 55 \times 6 \times 10^{-4}\,\frac{(78 - 0)}{1 \times 10^{-3}}$$

$$= 48 \times \frac{44}{7} \times 55 \times 6 \times 78 \times 10^{-1}$$

$$= 7.76 \times 10^5\ \text{W}$$

2. $mL = 7.76 \times 10^5 \times 60$

$m \times 3.4 \times 10^5 = 7.76 \times 60 \times 10^5$

$$m = \frac{7.76 \times 60}{3.4}$$

$$m = 136\, kg$$

3. $m \times 8.6 \times 10^5 = 7.76 \times 10^5 \times 60$

$$m = \frac{7.76 \times 60}{8.6}$$

$$m = 54.13\,kg$$

11. அலகு வெப்பநிலைப் படித்திறனின் கீழ் அலகுக் குறுக்குவெட்டுக்கு ஊடாக வெப்பம் பாயும் வீதமே வெப்பக்கடத்தாறு ஆகும்.

1.

$$K = 1 \times 10^2$$

$$A = \frac{22}{7} \times 7 \times 7 \times 10^{-4} \;\; 154 \times 10^{-4}\, m^2$$

$$\frac{Q}{t} = KA\frac{(\theta_1 - \theta_2)}{\ell}$$

$$1000 = 1 \times 10^2 \times 154 \times 10^{-4} \frac{(\theta - 80)}{1 \times 10^{-2}}$$

$$\theta - 80 = \frac{1000}{154} = 6.5$$

$$\theta = \underline{\underline{86.5^o C}}$$

2. $\ell = 3cm$

$$1000 = \frac{1 \times 154 \times 10^{-2}}{3 \times 10^{-2}}(\theta - 80)$$

$$19.48 = \theta - 80$$

$$\theta = \underline{\underline{99.48^o C}}$$

12)

$$10\cancel{00} = \frac{m}{t} \times 42\cancel{00} \times 18$$

$$\frac{10}{42 \times 18}\,kgs^{-1} = \frac{m}{t}$$

$$= \frac{m}{t}\, c\, \theta$$

$$10\cancel{00} = \frac{m}{t} \times 42\cancel{00} \times 18$$

$$\frac{10}{42 \times 18}\,kgs^{-1} = \frac{m}{t}$$

நீர் பெறும் வீதம் நிமிடத்துக்கு கிலோகிராமில்

$$= \frac{\cancel{10}^{50} \times \cancel{60}^{10}}{\cancel{42}_{21} \times \cancel{18}_{3}}$$

$$= \frac{50}{63}$$

$$= 0.794\ kg\,\min^{-1}$$

அலகு 11 - இயக்க இரசாயனவியல்

பல்தேர்வு வினாக்கள்

1. தாக்கவீதத்தில் பங்களிப்புச் **செய்யாத** காரணி பின்வருவனவற்றுள் எது?
   1. தாக்கவீதம்
   2. வெப்பநிலை
   3. தாக்கிகளின் பௌதிகத் தன்மை
   4. தாக்கம் நிகழும் பாத்திரத்தின் கனவளவு
   5. ஊக்கி

2. காய் பழுத்தல் என்பது தொடர்ச்சியான உயிரிரசாயனத் தாக்கங்களின் ஒரு விளைவாகும். சந்தைக்கு பழங்களை வழங்கும் போது இத்தாக்கங்களின் வீதத்தைக் கட்டுப்படுத்துவது அவசியமாகின்றது. காய்கள் பழுப்பதைத் தாமதப்படுத்துவதற்காகக் கையாளத்தக்க ஓர் உத்தி பின்வருவனவற்றுள் எது?
   1. காய்கள் அடங்கியுள்ள பாத்திரங்களை வெப்பமேற்றல்
   2. காய்கள் அடங்கியுள்ள பாத்திரங்களை குளிர்த்துதல்
   3. ஈரமாக்கிய காபைட்டு மூலம் ஊக்கி வாயு வழங்குதல்
   4. காய்கள் அடங்கியுள்ள பாத்திரங்களின் ஈரப்பதனை அதிகரித்தல்
   5. காய் பழுத்தல் என்பது இயற்கையான ஒரு செயன்முறையாதலால் எதுவும் செய்யாதிருத்தல்

3. உயிரிரசாயனத் தாக்கங்களின் வீதத்தைக் கட்டுப்படுத்துவதில் முக்கியத்துவம் பெறும் ஊக்கிகள் எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?
   1. புரதம்
   2. நொதியம்
   3. ஏகவின ஊக்கி
   4. ஓமோன்
   5. பல்லின ஊக்கி

4. சீமெந்து இறுகி உறுதிபெறல் என்பது தொடரான இரசாயனத் தாக்கங்களின் விளைவாக நிகழுவதாகும். வேலைத்தளங்களுக்கு பாரிய அளவில் கொங்கிரீற்றுக் கலவை தேவைப்படும் சந்தர்ப்பங்களில், சீமந்து கலக்கும் தளங்களில் உரிய தரங்களின்படி கொங்கிரீற்றுக் கலவை தயாரிக்கப்பட்டு அதற்கென விசேடமாக அமைக்கப்பட்ட வாகனங்களில் தேவையான இடம் வரையில் கொங்கிரீற்றுக் கலவை கொண்டு செல்லப்படும். இங்கு போக்குவரத்துக்கென நேரம் செலவாகின்றமையால் சீமெந்து இறுகுவது பொருத்தமானவாறு தாமதப்படுத்தப்படும். அதற்காகச் செய்யப்படுவது யாது?
   1. கலவையில் சீமெந்து குறைவாக இடல்
   2. இறுகுவதைத் தாமதப்படுத்தும் இரசாயனப் பதார்த்தங்களைப் போதுமான அளவுக்கு இடுதல்
   3. நீர் சேர்க்காது கலவையை வழங்குதல்
   4. சூடான நீர் சேர்த்து கலவையைத் தயாரித்தல்
   5. இவற்றுள் எதுவுமன்று

5). ஒரு தாக்கத்துக்குரிய (சக்தி) வெப்பவுள்ளுறைப் படம் கீழே தரப்பட்டுள்ளது.



தாக்கத்தின் ஏவற்சக்தி யாது?

1. E_2-E_1 2. E_3-E_1 3. E_3-E_2 4. E_2-E_3 5. E_1-E_3

6). சில தாக்கங்கள் சில படிமுறைகளின் வழியே நிகழும். (பல்படிமுறைத் தாக்கம்). இவ்வாறானதொரு தாக்கத்தின் ஒட்டுமொத்த வீதத்தில் பங்களிப்புச் செய்வது யாது?

1. தாக்க வீதம் உச்சமான படிமுறை
2. தாக்க வீதம் இழிவான படிமுறை
3. தாக்கத்தின் படிமுறைகளின் எண்ணிக்கை
4. ஆரம்பப் படிமுறையின் வீதம்
5. இறுதிப் படிமுறையின் வீதம்

7. தாக்கமொன்றின் தாக்க வீதத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணி,

1. வெப்பநிலையாகும்.
2. செறிவாகும்.
3. பௌதிகத் தன்மையாகும்.
4. ஊக்கலாகும்.
5. மேலுள்ள அனைத்துமாகும்.

8. $2N_2O_{5(9)} \uparrow 4NO_{2(9)} + O_{2(9)}$

ஆரம்பத்தில் $2N_2O_5$ இன் செறிவு ஆகக் காணப்பட்டதுடன் 10 செக்கனின் பின்னர். N_2O_5 இன் செறிவு $0.1 moldm^{-3}$ ஆகியது. N_2O_5 இன் செறிவுக் குறைவு வீதம் எவ்வளவு?

1. $0.3\ moldm^{-3}S^{-1}$
2. $0.3\ moldm^{-3}S^{-1}$
3. $0.03\ moldm^{-3}S^{-1}$
4. $0.03\ moldm^{-3}S^{-1}$
5. கணிப்பதற்குரிய தரவுகள் போதாது.

9. தாக்கமொன்று நடைபெற பின்வரும் எந்த நிபந்தனை/நிபந்தனைகள் பூரத்தி செய்யப்பட வேண்டும்?

(A) தாக்கத் துணிக்கைகளிடையே மோதுகை நிகழ வேண்டும்.

(B) தாக்கத் துணிக்கைகள் உரிய திசைகளில் மோதுகையடைய வேண்டும்.

(C) ஏவற் சக்தியை விஞ்சக்கூடிய அளவு சக்தியைப் பெற்றிருக்க வேண்டும்.

1. A மட்டும்
2. A,B மட்டும்.
3. A,C மட்டும்.
4. B,C மட்டும்.
5. A , B,C ஆகியன எல்லாம்.

10. $2NO_2(g) \rightarrow 2NO(g) + O_2(g)$

ஆரம்ப $NO_2(g)$ இன் செறிவு $0.01 mol dm^3$ என்றவாறு மூடிய குழாயொன்றினுள் உள்ளது. 100 செக்கனின் பின்னர் $NO_2(g)$ இன் செறிவு $0.0065\ mol dm^{-3}S^{-1}$ ஆகியது NO உருவாகும் வீதம் $moldm^{-3}S^{-1}$ இல் எவ்வளவாகும்?

1. 3.5×10^{-4}
2. 3.5×10^{-2}
3. 3.5×10^{-5}
4. 7.0×10^{-4}
5. 7×10^{-5}

11. உயர் வெப்பநிலையில் நடைபெறும் தாக்கம் தொடர்பான இரசாயனக் கைத் தொழிலுக்கான சரியான கூற்றாக அமைவது.
    1. தாக்கம் நடைபெறும் வெப்பநிலைக்கமைய செலவில் மாற்றம் ஏற்படாது.
    2. வெப்ப இழப்பைக் குறைப்பதன்மூலம் தாக்கவீதத்தை அதிகரிக்கலாம்.
    3. வெப்ப இழப்பைக் குறைப்பதன்மூலம் ஏற்படும் செலவினத்தைக் குறைக்கலாம்.
    4. குறைந்த வெப்பநிலையில் தாக்கம் நடைபெறும்போது தாக்கவீதத்தில் பாதிப்பு ஏற்படாது.
    5. பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் அளவிற்கமைய வழங்கப்படும் வெப்பத்தின் அளவில் பாதிப்பு ஏற்படாது.

12. $H_{2(g)}+I_{2(g)} \rightleftharpoons 2HI_{g)}$

$2H_{2(g)} \rightarrow H_{2(g)} + I_{2(g)}$ எனும் தாக்கத்திற்கான ஏவற்சக்தி.

(1) A (2) B (3) C

(4) A-B (5) B+C



கட்டுரை வினாக்கள்

1. பின்வரும் தாக்கத்தைக் கருத்திற்கொள்க.

$$A_{(aq)} + 2B \rightarrow AB_{2(aq)}$$

A, B ஆகியவற்றின் செறிவுகள் முறையே $0.2\ moldm^{-3}$, $0.3\ moldm^{-3}$ என்றவாறு கலக்கப்பட்டன. 50 செக்கன்களின் பின் AB_2 இன் செறிவு $0.05\ moldm^{-3}$ ஆகியது.

   i. A யின் சார்பில் தாக்கவீதத்துக்கான சேர்வையொன்றை எழுதுக.
   ii. B யின் சார்பில் தாக்கவீதத்துக்கான சேர்வையொன்றை எழுதுக.
   iii. AB_2 யின் சார்பில் தாக்கவீதத்துக்கான சேர்வையொன்றை எழுதுக.
   iv. மேலே குறிப்பிட்ட சேர்வைகளுக்கிடையிலான தொடர்பைத் தருக.
   v. A விரயமாகும் வீதம் எவ்வளவு ?
   vi. B விரயமாகும் வீதம் எவ்வளவு ?
   vii. AB உருவாகும் வீதம் யாது ?
   viii. இரசாயனக் கைத்தொழிலொன்றை ஆரம்பிக்கும்போது தாக்கவீதத்தை அறிந்துகொள்வதன் முக்கியத்துவம் யாது?

2. குறித்த இரசாயனத் தாக்கங்கள் ஒரு படிமுறையில் நிகழும். இவை அடிப்படைத் தாக்கிகள் எனப்படும்.

   i. தாக்கப் பொறிமுறை என்றால் என்ன?
   ii. பல்படிமுறை தாக்கத்தில் இடைவிளைவு என்றால் என்ன?
   iii. பல்படிமுறைத் தாக்கத்தைத் தீர்மானிக்கும் படிமுறை என்றால் என்ன ?
   iv. தாக்கப் பொறிமுறையை அறிந்திருப்பதால் கைத்தொழிலில் ஏற்படும் அனுகூலங்கள் யாவை?
   v. தாக்கமொன்று நடைபெற பூரணப்படுத்தப்படவேண்டிய நிபந்தனைகளை விளக்குக

3. தாக்கவீதத்தில் வெப்பநிலை, செலவு (வாயுவெனின் அமுக்கம்) பௌதீகத் தன்மை ஊக்கல் என்பன செல்வாக்குச் செலுத்துவதனை எளிய பரிசோதனை ஒவ்வொன்றின் மூலம் சுருக்கமாக விளக்குக.

4. தாக்கவீதத்தை அதிகரிக்கும் காரணிகளான வெப்பநிலை, செறிவு, பௌதிகத் தன்மை, ஊக்கல் ஆகியவற்றின் செல்வாக்கினை விவரிக்க.

பல்தேர்வு வினாக்களுக்கான விடைகள்

1 - 4	6 - 2	11 - 3
2 - 2	7 - 5	12 - 1
3 - 2	8 - 3	13 - 3
4 - 2	9 - 5	14 - 3
5 - 3	10 - 3	15 - 4

கட்டுரைவகை வினாக்களுக்கான விடைகள்

1. i. தாக்கவீதம் $= \frac{-\Delta\{A\}}{\Delta t}$

ii. தாக்கவீதம் $= -\frac{1}{2}\frac{\Delta\{B\}}{\Delta t}$

iii. தாக்கவீதம். $= \frac{\Delta\{AB_2\}}{\Delta t}$

iv. $\frac{-\Delta\{A\}}{\Delta t} = \frac{-1}{2}\frac{\Delta\{B\}}{\Delta t} = \frac{\Delta\{AB_2\}}{\Delta t}$

v. A இன் செறிவில் ஏற்படும் குறைவு $= 0.05 \text{mol d}m^{-3}$

$\therefore$ தாக்கவீதம். $= \frac{0.05 \text{ mol d}m^{-3}}{50s}$

$= 0.001 \text{mol d}m^{-3}s^{-1}$

vi. B இல் செறிவில் ஏற்படும் குறைவு $= 0.1 \text{mol d}m^{-3}$

$\therefore$ தாக்கவீதம். $= \frac{0.1 \text{mol d}m^{-3}}{50\,s}$

$= 0.002 \text{ mol d}m^{-3}s^{-1}$

vii. AB_2 ஏற்படும் குறைவு $= \frac{0.05 \text{ mol d}m^{-3}}{50\,s}$

$= 0.001 \text{mol d}m^{-3}s^{-1}$

viii. இன் மூலமாக அலகு நேரத்தில் கிடைக்கும் விளைவு மற்றும் தாக்கவீதத்தின் அளவு என்பவற்றை அறியலாம். இதிலிருந்து கைத்தொழிலின் இலாபத்தைக் கணிக்கலாம்.

2. i. பல்படிமுறைத் தாக்கமொன்றில் தாக்கி விளைவாக மாறும் விதத்தைப் பக்கவிளைவுகள் அடங்கலாகப் படிமுறையில் காட்டுக.

ii. தாக்கியின் இறுதி விளைவு எஞ்சாத போதும் தாக்கல் படிமுறைகளில் உருவாகும் விளைவு.

iii. மெதுவாக நடைபெறும் படிமுறை

iv. இதன் மூலம் தாக்கவீதம் தங்கியுள்ள படிமுறையை இனங்காணலாம். இதனைக் கட்டுப்படுத்துவதன்மூலம் கைத்தொழிலில் இலாபமீட்டமுடியும்.

v. * மூலக்கூறுகளின் மோதுகை
* மூலக்கூறுகள் உரிய திசைகோள்களில் மோதுகையைடைதல்.
* மோதுகையடையும் மூலக்கூறுகள் ஏவற்சக்தியினை விஞ்சியிருத்தல்.

vi. ஊக்கிகளின் செல்வாக்கு.



NaOH, MnO_2 ஆகியன இடப்பட்ட குழாய்களில் குமிழிகள் விரைவாக வெளியேறும்.

3. * வெப்பநிலை அதிகரிக்கும்போது மூலக்கூறுகளின் இயக்கச் சக்தி அதிகரிக்கும். இதன்போது மோதுகை அதிகரிக்கும். மேலும் தாக்கசக்தியை விஞ்சி, மூலக்கூற்றுப் பின்னம் அதிகரிக்கும்.
* செறிவை அதிகரிக்கும் போது மூலக் கூறுகளுக்கு இடையிலான மோதுகை அதிகரிக்கும்.
* அலகு திணிவின் மேற்பரப்புப் பரப்பளவு அதிகரிக்க ஏற்படும் மோதுகைகளின் அளவும் அதிகரிக்கும்.
* ஊக்கி மூலமாக தாக்கிகளின் ஏவற்சக்தி குறைவடையும்.



அலகு 13 - கணினி மென்பொருட் பயன்பாடு
பல்தேர்வு வினாக்கள்

1. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளொன்றானது
   1. Open office writer 2. Windows 7 3. Excel 2010 4. Internet Explorer
   5. Macromedia Flash.
2. MS-Word இல் புதிய கோப்பு ஒன்றைப் பெறுவதற்கான வழி;
   1. File>Tab 2. File>New
   3. File>Open 4. File>Save As
   5. Edit>Past
3. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளொன்றில் **சேமிக்கமுடியாத** கோப்பு வகை
   1. .doc 2. .html 3. .odt 4. .exe 5. .rtf
4. வெட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் குறுவழிச் சாவி யாது?
   1. ctrl + C 2. ctrl + X 3. ctrl + V 4. ctrl + F 5. ctrl + P
5. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளொன்றில் ctrl + z உபயோகப்படுத்துவது
   1. யாதேனுமொன்றைக் கழிப்பதற்காகும்.
   2. எல்லாவற்றையும் தெரிவுசெய்வதற்காகும்.
   3. z எழுத்தைக் கருமை நிறமாக்குவதற்காகும்.
   4. ஒருபடி பின்செல்வதற்காகும் (Undo)
   5. ஒருபடி முன்செல்வதற்காகும் (Redo)
6. வெவ்வேறு வகை ஆவணங்களை உருவாக்குவதற்குப் பயன்படுத்தக்கூடிய மென்பொருளாவது
   1. விரிதாள் மென்பொருள்
   2. மென்பொருள்
   3. செய்பணிமுறைமை மென்பொருள்
   4. தரவு முகாமை மென்பொருள்
   5 சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருள்
7. ஆவணமொன்றிலுள்ள பாடப் பக்கத்தில் இடது, வலது ஆகிய இரண்டு ஓரங்களையும் (Margin) நேர்ப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் கட்டளை எது?
   1. Align Left 2. Align Right
   3. Align Center 4. Align Justify
   5. Align Top
8. கீழே தரப்பட்ட மாதிரியானது.

   - Terazzo Tile
   - Terazzo Marble
   - Terazzo Chipe
   - Terazzo Floors

   1. இலக்கமிட்டு செய்யப்பட்டுள்ளது.
   2. Bullets (குண்டுக்குறிகள்) இட்டுச் செய்யப்பட்டுள்ளது.
   3. Center நேர்ப்படுத்தஞ் செய்யப்பட்டுள்ளது.
   4. Left நேர்ப்படுத்தஞ் செய்யப்பட்டுள்ளது.
   5. மீ இணைப்புச் (Hyperlink) செய்யப்பட்டுள்ளது.
9. பந்தியொன்றில், முதலாம் வரி தவிர ஏனைய வரிகள் பக்கத்தின் இடது பக்கத்திலிருந்து தொடங்க வேண்டிய இடத்தைக் காட்டுவதற்குப் பயன்படுவது.
   1. First Line Indent 2. Hanging Indent 3. Left Indent
   4. Right Indent 5. Tab Selecter

10. மேலே வினா 8 இல் பயன்படுத்தப்பட்டுள்ள கோட்டு வகை
    1. Page Boader
    2. Paragraph Boader
    3. Text Boader
    4. Inside Boader
    5. Outside Boader

11. படத்துக்கு மேலேயும் கீழேயும் மாத்திரம் சொற்கள் அமையுமாறு செய்வதற்காக பிரயோகிக்கப்பட வேண்டிய Wrap style எது
    1. Square
    2. Tight
    3. Through
    4. Top and Bottom
    5. Behind Text

12. இரண்டு வரிகளையும் மூன்று நிரல்களையும் கொண்ட அட்டவணையொன்றை உருவாக்குவதற்குச் செய்யவேண்டியது
    1. Table > Insert Table
    2. Edit > Table
    3. Boarder & Shading
    4. Format > Table
    5. Table > Insert > Column

13. உருவாக்கப்பட்ட அட்டவணைக்குப் புதிதாக வரிசையொன்றைச் செருகுவதற்குச் செய்யவேண்டியது
    1. Table > Insert > Column
    2. Insert > Table Properties
    3. Format > Table Boarder
    4. Table > Number of Row
    5. Table > Insert > Row

14. அட்டவணையின் அடுத்தடுத்துள்ள இரு கலங்களை ஒரு கலமாக மாற்றுவதற்கு
    1. கலங்கள் இரண்டையும் தெரிவுசெய்து Split செய்யப் பயன்படும்
    2. கலங்கள் இரண்டையும் தெரிவுசெய்து Merge செய்யப் பயன்படும்
    3. கலங்கள் இரண்டையும் தெரிவுசெய்து Shade செய்யப் பயன்படும்
    4. கலங்கள் இரண்டையும் தெரிவுசெய்து Delete செய்யப் பயன்படும்
    5. கலங்கள் இரண்டையும் தெரிவுசெய்து Border செய்யப் பயன்படும்

15. உருவாக்கப்பட்ட கடிதமொன்றை, அச்சிட முன்னர் அச்சு முன்காட்சியைப் பெறும் வழி
    1. Print Preview மூலம்
    2. Ctrl + P அழுத்துவதன் மூலம்
    3. Zoom கட்டளையை Whole Page எனத் தெரிவுசெய்தல் மூலம்
    4. View > web page தெரிவுசெய்தல் மூலம்.
    5. Page setup > Print Preview மூலம்.

16. பக்கமொன்றின் பாட ஓரம் (Margine) உருவாக்கப்படுவது
    1. Tools > Page setup மூலம்
    2. Edit > Margin மூலம்
    3. File > Page setup மூலம்
    4. View > Margin மூலம்
    5. Insert > Margin மூலம்

17 சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளொன்றில் எழுத்துக்களைக் கருமையாக்குவதற்கும் எழுத்துக்களைப் பெரிதாக்குவதற்கும் பயன்படுத்தும் குறுக்கு வழிகள் எவை?
    1. Ctrl + I உம் Ctrl + [உம்
    2. Ctrl + X உம் Ctrl +] உம்
    3. Ctrl + Z உம் Ctrl + A உம்
    4. Ctrl + B உம் Ctrl +] உம்
    5. Ctrl + C உம் Ctrl + V உம்

18. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளில் பின்வரும் எந்தக் குறியீடு பாடத்தை (Text) பக்கத்தின் மத்தியில் நேர்ப்படுத்தலுக்காகப் (Aligning) பயன்படும்?
    1.
    2
    3.
    4.
    5. இவற்றுள் எதுவுமல்ல

19. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளிலுள்ள ¶ படவுருவைப் (Icon) பயன்படுத்திப் பின்வரும் எதனைச் செய்யலாம்
    1. வடிவமைப்பை (Formatting) நீக்குகுதல்.
    2. தத்தல்கள் (Tab) அடையாளமிடல்.
    3. ஒளிந்துள்ள வடிவங்களைப் பார்த்தல்.
    4. பந்திகளை வேறாக்கும் இடங்களைக் காட்சிப்படுத்தல்.
    5. மேலுள்ள எதுவுமன்று.
20. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளொன்றில் புதிய ஆவணமொன்றினை (New Document) தொடங்க முன்னர் பயன்படுத்திய குறுக்குவழிச் சாவிச் (Shortcut Key) சேர்மானம் யாது?
    1. Ctrl + D
    2. Ctrl + W
    3. Ctrl + N
    4. Ctrl + M
    5. Ctrl + O
21. சொல் முறைவழிப்படுத்தலில் எனும் படவுரு (Icon) பின்வரும் எதற்காகப் பயன்படுத்தப்படும்.?
    1. குண்டுக்குறிப் பட்டியலொன்றை அல்லது இலக்கப் பட்டியலொன்றை உட்படுத்தல்.
    2. பந்தியொன்றினது உபபந்தி உள் தள்ளும் (Indent) மட்டத்தைக் குறைத்தல் / கூட்டுதல்
    3. பக்கமொன்றின் ஓரங்களைக் (Margin) கூட்டிக் குறைத்தல்.
    4. பந்தியொன்றின் எழுத்துக்களின் அளவை மாற்றுதல்.
    5. பந்திகளுக்கு இடையே இடைவெளியைக் குறைத்தல் / கூட்டுதல்.
22. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளொன்றில் Ctrl + X மற்றும் Ctrl + V ஆகியவை முறையே பின்வருவனவற்றுள் எவற்றுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன?
    1. வெட்டுவதற்கும் ஒட்டுவதற்கும்.
    2. பிரதிசெய்வதற்கும் ஒட்டுவதற்கும்.
    3. தெரிவு செய்தவற்கும் ஒட்டுவதற்கும்.
    4. களஞ்சியப்படுத்தவும் ஒட்டுவதற்கும்.
    5. பிரதிசெய்வதற்கும் தெரிவுசெய்வதற்கும்.
23. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள Letter எனும் கோப்பைத் திறந்து அதனைப் பதிப்புச் செய்த பின்னர் Letter-Edited எனச் சேமிக்கவேண்டியுள்ளது. இதற்காக அறிமுகப்படுத்த வேண்டியது பின்வருவனவற்றுள் எது?
    1. File > Save
    2. File > Save as..
    3. Ctrl + S
    4. Ctrl + A
    5. Ctrl + S + A
24. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளொன்றில் பயன்படும் அட்டவணைகள் தொடர்பான **தவறான கூற்று.**
    1. அட்டவணையின் இறுதிச் சிற்றறையிலிருந்து தத்திச் (Tab) சாவியை அழுத்துவதன் மூலம் புதிய வரியொன்றினைச் சேர்க்கலாம்.
    2. உட்படுத்திய பெறுமானங்கள் தொடர்பாக கணித்தல்களைச் செய்வதற்காகச் சூத்திரங்களைப் பயன்படுத்தலாம்.
    3. பந்தி, நிரல்கள், வரிசைகள். சிற்றறைகள் ஆகியவற்றின் அளவு வேறுபடுமாறு முற்றுமுழுதாக அட்டவணையின் அளவை ஒரேயடியாக மாற்ற முடியாது.
    4. சில சிற்றறைகளை ஒன்றிணைப்பதற்கு (Merge) சிற்றறைகளைப் பிரிப்பதற்கு (Split) வசதி உண்டு
    5. புதிதாகப் பந்தி நிரல்களையும் வரிசைகளையும் சேர்க்கலாம்
25. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளொன்றிலிருந்து யாதேனும் மாற்றம் செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் அதனை நீக்குவதற்காக (Undo) இனைப் பயன்படுத்துவதற்கான குறுக்குவழிச் சாவிச் சேர்மானம் யாது?
    1. Ctrl + X
    2. Ctrl + Y
    3. Ctrl + Z
    4. Ctrl + W
    5. Ctrl + C

26. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளொன்றில் உதவி (Help) பெறுவதற்காகப் பயன்படுத்தப்படும் செயற்படு சாவி யாது?
    1. F1 2. F2 3. F8 4. F10 5. F5

27. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளொன்றில் H_2O என்பதை உட்படுத்துவதற்காக பின்வரும் எதனைப் பயன்படுத்தலாம்.
    1. Superscript 2. Subscript 3. Function
    4. Wordwrap 5. SmallCap

28. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளொன்றில் உள்ள பின்வரும் தத்திகளின் (Tab) சரியான ஒழுங்குமுறையில் வருவது எது?

    1. வலது தத்தல் (Right Tab), இடது தத்தல் (Left Tab), மையத் தத்தல் (Center Tab), தசமத் தத்தல் (Decimal Tab)
    2. இடது தத்தல், வலது தத்தல், மையத் தத்தல், தசமத் தத்தல்
    3. இடது தத்தல், வலது தத்தல், தசமத் தத்தல் , மையத் தத்தல்
    4. வலது தத்தல், இடது தத்தல், தசமத் தத்தல் , மையத் தத்தல்
    5. வலது தத்தல், தசமத் தத்தல், மையத் தத்தல், இடது தத்தல்

29. நேர்முகப் பரீட்சையொன்றுக்கு ஒரு தொகுதி விண்ணப்பதாரிகளை அழைப்பதற்காக, ஒரே மாதிரியில் அமைந்த கடிதங்களைத் தபாலில் அனுப்ப வேண்டியுள்ளது. கணினியில் சேமிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளின் பெயர், முகவரி, நேர்முகப் பரீட்சைக்கு வருகைதர வேண்டிய நேரம் ஆகிய ஒன்றுக்கொன்று வேறுபட்ட தரவுகளை உட்படுத்தி கடிதங்களைத் தயாரிப்பதற்காக சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளில் அடங்கியுள்ள விசேட வசதி எது?
    1. Mail creater 2. Mailing 3. Mail Merge
    4. Merge Mail 5. email

30. பின்வருவனவற்றைக் கவனிக்க.
    A. MS-Excel
    B. MS-Word
    C. Word Perfects

    இவற்றுள் சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருள்/பொருள்கள் (Word Processing software) எவை / எது?
    1. A மாத்திரம் 2. A,B மாத்திரம் 3. B,C மாத்திரம்
    4. B மாத்திரம் 5. மேலுள்ள எல்லாம்

31. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளொன்றில் ஆவணமொன்றில் எல்லாப் பக்கங்களிலும் கீழ்ப்பகுதியில் உங்களது பெயரை இடவேண்டியுள்ளதெனின் அதற்காகப் பயன்படுத்த வேண்டிய பகுதி,
    1. அடிப்பாடம் (Foot text) 2. அடித்தளக்குறிப்பு (Footer) 3. அடிக்குறிப்பு (Foot Note)
    4. தலைப்பு (Header) 5. மேலுள்ளவை எவையுமல்ல.

32. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருள் ஆவணமொன்றில் வடிவமொன்றைச் செய்த உடனேயே அதனை Undo செய்து காட்டலாம். அதே கணத்தில் அதனை மீளச் செய்வதற்காகப் பயன்படுத்துவது பின்வருவனவற்றுள் எது?
    1. 2. 3. 4. 5. →

33. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளொன்றில் திசைமுகத்தை (Orientation) மாற்றுவதன் மூலம்.
    1. பக்கத்தின் அளவை மாற்றலாம்.
    2. பாடம் அமையும் திசையை மாற்றலாம்.
    3. பக்கத் திசையை Landscape ஆகவோ Portrait ஆகவோ மாற்றலாம்.
    4. பக்கமொன்றின் ஓர எல்லைகளை (Margins) மாற்றலாம்.
    5. பக்கத்தைத் தேவையான அளவு பாகைக்கு சுழற்றலாம்.
34. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருள் ஆவணமொன்றின் பாடத்தைத் (Text) தெரிவுசெய்தல் தொடர்பான சரியான கூற்று எது?
    1. Alt + A சாவிச் சேர்மானம் மூலம் முழு ஆவணத்தையும் ஒரேயடியாகத் தெரிவு செய்யலாம்.
    2. பந்தியொன்றில் முன்னால் சுட்டியை (Mouse) ஒரேயடியாக மூன்று தடவைகள் அழுத்துவதால் (Triple Click) பந்தியைத் தெரிவு செய்யலாம்.
    3. Ctrl சாவியுடன் சுட்டியை அழுத்துவதன் மூலம் ஒரு வசனத்தைத் தெரிவுசெய்யலாம்.
    4. ஒரு அந்தத்தில் நிலைகாட்டி Cursor ஐ வைத்து மற்றைய ஓரத்தில் Ctrl சாவியுடன் சுட்டியை (Mouse) அழுத்துவதன் மூலம் ஒரு வாக்கியத்தைத் தெரிவுசெய்யலாம்.
    5. Select எனும் கட்டளை (Command) மூலம் அதனைச் செய்யலாம்.
35. பந்தியொன்றின் முதலாவது எழுத்தைப் பெரிதாக்கிக் காட்டுவதற்காக சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளில் காணப்படும் கட்டளை யாது?
    1. வேர்ட் ஆர்ட் (Word ART)
    2. டுரொப் கெப் (Drop Cap)
    3. பாடப் பெட்டி (Text Box)
    4. எழுத்துரு அளவு (Font Size)
    5. எழுத்தைப் பெரிதாக்கல் (Maximize)
36. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளொன்றைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட ஒரு வினாப்பத்திரத்தில் எல்லாப் பக்கங்களிலும் மேல் ஓரத்தில் பாடத்தின் பெயரும் கீழ் ஓரத்தில் பக்க இலக்கமும் இடப்பட்டுள்ளன. இதற்காகப் பயன்படுத்தப்படுவது எது?
    1. Top & Bottom Margine
    2. Head Note & Foot Note
    3. Header & Footer
    4. Top Section & Bottom Section .
    5. Print Note
37. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளொன்றில் உள்ள ஒரு பகுதி பின்வருவனவற்றுள் எது?
    1. ஆவணத்தில் வரைபடமொன்றைப் புகுத்தல்.
    2. ஆவணத்தில் அட்டவணையொன்றைப் புகுத்தல்.
    3. அசைவூட்டப் படமொன்றை உருவாக்கல்.
    4. வெவ்வேறு தரவுகளைச் சேர்த்தல்.
    5. ஆவணத்தில் படமொன்றைச் சேர்த்தல்.
38. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளொன்றில் Mail Merge இனைச் செயற்படுத்தத் தேவையானவை பின்வருவனவற்றுள் எது? / எவை?
    A. பிரதான ஆவணம்.
    B. கடிதத்தைப் பெறுபவரின் விவரங்கள்.
    C. மின்னஞ்சல் முகவரி
    1. A மட்டும். 2. A,B மட்டும். 3. A,C மட்டும்.
    4. C மட்டும். 5. மேற்படி எல்லாம்
39. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளொன்றில் ஆவணமொன்றின் எழுத்துச் சரிபார்ப்பியைச் (Spelling check) செயற்படச் செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் செயற் சாவி (Function key) எது?
    1. F5 2. F7 3. F8 4. F10 5. F2

40. விரிதாளொன்றின் சிற்றறையொன்றில் பின்வரும் சமன்பாட்டைப் புகுத்தும்போது TRUE எனக் காட்டும் சமன்பாடு பின்வருவனவற்றுள் எது?
    1. =NOT(6>2)
    2. =NOT("A">"B")
    3. =AND(6=6, "A">"B")
    4. =OR(6=7, "A">"B")
    5. =AND(6=7, "A">"B")

41. கீழே தரப்பட்டுள்ள x, y, z ஆகிய தருக்கக் கோவைகளின் பெறுபேறுகள் முறையே
    x : =And(5<>4, "B">"A")
    y : =Not(OR(9<2,10>9))
    z : =And(9<>8, Not(6>7))
    1. True, False, True
    2. True, True, True
    3. True, True, False
    4. False, False, True
    5. False, False, False

42. விரிதாள் மென்பொருளொன்றில் சிற்றறையொன்றில் (Cell) புகுத்தப்பட்டுள்ள சார்புக்கு உதாரணம் பின்வருவனவற்றுள் எது?
    1. = A3 + B1
    2. = A1+B3*A10
    3. =Count(A1:A5)
    4. SUM(A5:A10)
    5. =45+60

43. வாய்ப்பாடு (Formula) , சார்பு (Function), பணித்தாள் (Worksheet) ஆகியன பின்வரும் எந்தப் பணிசெய் மென்பொருளில் காணப்படும்.?
    1. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருள்.
    2. விரிதாள் மென்பொருள்
    3. அளிக்கை மென்பொருள் (Presentation Software)
    4. தரவுத்தள முகாமை மென்பொருள். (Databass Managment System Software)
    5. வரைவியல் மென்பொருள் (Graphic Software)

44. இப்படத்தில் காணப்படும் வேலைத்தாளில் உள்ள எண்களின் சராசரிப் பெறுமானம் F1 சிற்றறையினுள் இடுவதற்காகப் **பயன்படுத்த முடியாத** சார்பு (Function) பின்வருவனவற்றுள் எது?

	A	B	C	D	E	F
1	25	28	29	31	23	
2						
3						

    1. = (A1 + B1+C1+D1+E1)/5
    2. = SUM(A1:E1)/5
    3. = AVERAGE(A1:E1) * 1/5
    4. = AVERAGE(A1:E1)
    5. = SUM(A1:E1) * 0.2

45. விரிதாள் மென்பொருள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் உண்மையானது எது?
    1. சிற்றறையின் பாடங்கள் வலமாகவும் பெறுமானங்களும் வாய்ப்பாடுகளும் (Formula) இடமாகவும் நேர்ப்படுத்தப்படும்.
    2. சிற்றறையொன்றின் பாடங்கள் இடமாகவும், பெறுமானங்களும் வாய்ப்பாடுகளும் வலமாகவும் நேர்ப்படுத்தப்படும்.
    3. சிற்றறையொன்றின் பாடங்களும் வாய்ப்பாடுகளும் இடமாகவும் பெறுமானங்கள் வலமாகவும், நேர்ப்படுத்தப்படும்.
    4. சிற்றறையொன்றின் பாடங்கள் வலமாகவும், பெறுமானங்களும் சூத்திரங்களும் இடமாகவும் நேர்ப்படுத்தப்படும்.
    5. சிற்றறையொன்றின் பாடங்களும் பெறுமானங்களும் வாய்ப்பாடுகளும் வலமாகவும் நேர்ப்படுத்தப்படும்.

46. தரப்பட்டுள்ள பணித்தாளொன்றில் பண்டங்கள் சிலவற்றின் nga uf; S k; t ip y f S k; A, B நிரல்களில் தரப்பட்பட்டுள்ளன. அப்பண்டங்களின் கழிவுச் சதவீதம் C12 சிற்றறையில் தரப்பட்டுள்ளது. தரவைப் பயன்படுத்தி, முதலாம் பண்டத்திற்குரிய கழிவைக் கணித்து அதன் மூலம் ஏனைய பண்டங்களுக்குரிய கழிவைக் காண்பதற்காக C2 சிற்றறையில் உட்படுத்த வேண்டிய வாய்ப்பாடு எது?

	A	B	C
1	**Name**	**Price**	**Discount**
2	Item-01	2500	
3	Item-02	3000	
4	Item-03	2750	
12	Dis.Rate	5%	

1. = B2*B12
2. = B2 * #B$12
3. = B2 * $B12
4. = B2 * B$12
5. = B$2 * B$12

47. கீழே தரப்பட்டுள்ள A, B, C ஆகியவற்றுள் விரிதாள் மென்பொருளொன்றில் பயன்படும் சிற்றறை (Cell Address) முகவரி எது / முகவரிகள் எவை?

A. $A2$
B. A2
C. $A2

1. A மட்டும்
2. Bமட்டும்
3. C மட்டும்
4. B,C மட்டும்
5. மேற்கூறிய எல்லாம் சரி

48. விரிதாள் மென்பொருளொன்றில் A2 சிற்றறையிலுள்ள பெறுமானத்தை நூற்றுக்கு நூற்றைம்பதாக உயர்த்துவதற்கு B2 சிற்றறையில் எழுதவேண்டிய சூத்திரம் பின்வருவனவற்றுள் எது?

1. = A2*3/2
2. = A2+A2*1/2
3. = A2*1.5
4. = A2 * 150%
5. = (A2 * A2)/2

49. விஞ்ஞானப் பாடத்துக்காக ஆண்டிறுதிப் பரீட்சையில் மாணவர்கள் பெற்ற புள்ளிகளை விரிதாள் மென்பொருளில் புகுத்தி குறைந்த பட்சம் 35 புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் ''Pass'' எனவும் ஏனைய மாணவர்கள் ''Fail'' எனவும் பெற எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வரிகளில் முதலாவது மாணவனின் புள்ளி B2 சிற்றறையில் உள்ளபோது அல்லது பெறுபேற்றை C2 சிற்றறையில் பெறுவதற்காக எழுத வேண்டிய சூத்திரம் பின்வருவனவற்றுள் எது?

1. = IF(B2>35, "Pass","Faill")
2. = IF(B2<35, "Fail","Pass")
3. = IF(B2<=35, "Fail","Pass")
4. = IF(B2>=35, "Fail","Pass")
5. = IF(B2<>35, "Pass","Fail")

50. விரிதாள் மென்பொருளொன்றில் புதிய வேலைப் புத்தகமொன்றை (New WorkBook) தொடங்குவதற்காகப் பயன்படுத்தப்படும் குறுக்குவழிச் சாவி (Shortcut Key) எது?

1. Ctrl + D
2. Ctrl + W
3. Ctrl + N
4. Ctrl + M
5. Ctrl + O

51. தரப்பட்டுள்ள விரிதாளில் உள்ள புள்ளிகளின் கூட்டுத்தொகை A7 சிற்றறையில் பெறுவதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய சார்பு எது?

	A
1	Marks
2	65
3	70
4	55
5	75
6	70
7	

1. = Total (A2:A6)
2. = Add (A2:A6)
3. = SUM (A2:A6)
4. = Count (A2:A6)
5. = Plus(A2:A6)

52. மேலே வினா 51 இல் தரப்பட்ட விரிதாளில் A9 சிற்றறையில் = Count (A1:A8) என எழுதுவதால் கிடைக்கும் பெறுபேறு யாது?
    1. 335 2. 8 3. 6 4. 5 5. 9
53. A9 சிற்றறையில் =CountA (A1:A8) என எழுதுவதால் கிடைக்கும் பெறுபேறு யாது?
    1. 335 2. 8 3. 6 4. 5 5. 9
54. பின்வரும் கூற்றுக்களைக் கவனிக்குக.
    A. வடிவங்களை அமைக்கலாம்
    B. வரைபுகளைப் புகுத்தலாம்
    C. அட்டவணைகளைப் புகுத்தி அவற்றுக்குப் பெறுமானங்கள் தொடர்பான கணித்தல்கள் செய்யலாம்
    D. வீடியோக் கோப்புகளைப் (Video File) பதிப்புச் செய்யலாம்.

    இவற்றுள் விரிதாள் மென்பொருளொன்றில் உள்ள வழி எது? / வழிகள் எவை?
    1. A மட்டும் 2. A, B மட்டும் 3. A,B, C மட்டும்
    4. A, B, D மட்டும் 5. மேலுள்ள எல்லாம் சரி.
55. தெரிவு செய்யப்பட்ட ஒரு வீச்சில் உள்ள எண்களின் மிகச் சிறிய பெறுமானத்தைப் பெறுவதற்காக விரிதாள் மென்பொருள்களில் தரப்பட்டுள்ள சார்பு (Function) எது?
    1. =Mini ( ) 2. = Min ( ) 3. = Small ( )
    4. = Lowest ( ) 5. = Minimum ( )
56. விரிதாள் ஒன்றில் நிரலொன்றும் (Column) நிரையொன்றும் (Row) இடைவெட்டுவதால் தோன்றுவது பின்வருவனவற்றுள் எது?
    1. சிற்றறை (Cell) 2. பணித்தாள் (Worksheet) 3. வேலைப் புத்தகம் (Workbook)
    4. அட்டவணை (Table) 5. வரைபு (Chart)
57.

	A	B	C
1	4	6	
2	5	7	
3			

    C1 சிற்றறையில்=A$1 *B1 புகுத்திய பின்னர் அதனை C2 சிற்றறையில் பிரதி செய்வதால் C2 சிற்றறையில் காட்டப்படும் பெறுமானம் யாது?
    1. 24 2. 35 3. 28 4. 30 5. 20
58. பின்வரும் சிற்றறை முகவரிகளைக் கருதுக.
    A. F7
    B. $F7
    C. F$7
    D. F7

    இவற்றுள் விரிதாள் மென்பொருள்களின் சிற்றறை முகவரி / முகவரிகள் எவை?
    1. A மட்டும் 2. C,D மட்டும் 3. D மட்டும்
    4. A, D மட்டும் 5. மேலுள்ள எல்லாம் சரி.
59 ஒரு பாடசாலையில் க.பொ.த (உயர்தர) மாணவர்கள் பாடத்துறைகளைத் தெரிவுசெய்துள்ள விதத்தை விரிதாளொன்றில் வரைபடமாகக் (Chart) காட்டி வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்ப வேண்டியுள்ளது.
    1. பந்தி நிரல் வரைபடம் (Column Chart)
    2. வட்ட வரைபடம் (Pie Chart)
    3. கோட்டு வரைபடம். (Line Chart)
    4. சிதறல் வரைபடம் (Scatter Chart)
    5. மேற்படி எல்லாவற்றையும் பயன்படுத்தலாம்.

60. தரப்பட்டுள்ள விரிதாளில் A2 சிற்றறையில் =MAX(A1:F1) என எழுதுவதால் கிடைக்கும் பெறுமதி யாது?

	A	B	C	D	E	F	G	H
1	70	65	80	66	77	80		
2								

1. 2 2. 80 3. 65
4. 70 5. 66

61. இந்தப் பணித்தாளின் B2 சிற்றறையில் = (A1-B1)/A2 + B1 என எழுதுவதால் கிடைக்கும் பெறுபேறு யாது?

	A	B
1	55	25
2	5	

1. 1 2. 6 3. 75 4. 25
5. 31

62. விரிதாள் மென்பொருளொன்றில் சிற்றறை முகவரியை வழங்கி குறித்த சிற்றறைகளினுள் ஒரேயடியாகப் பிரவேசிப்பதற்காகப் பயன்படுத்தக்கூடிய சாவி எது?
1. F1 2. F2 3. F5 4. F7 5. F8

63. வேலைத்தாளொன்றில் A1, B1, C1 ஆகிய சிற்றறைகளில் முறையே பின்வரும் வாய்ப்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
= 2 <> 1
=NOT (2 > 3)
= "A" > "B"

மேற்படி சிற்றறைகளுள் True என்பதைக் காட்டும் சிற்றறை எது/சிற்றறைகள் எவை?
1. B1 மட்டும் 2. C1 மட்டும் 3. A1,B1 மட்டும்
4. B1,C1 மட்டும் 5. A1,B1,C1 எல்லாம் சரி

64. பணித்தாளொன்றில் புகுத்தப்பட்டுள்ள பின்வரும் வாய்ப்பாடுகளுள் False எனக் காட்டுவது எது?
1. = AND(2+1<>2+2, 1+3<=4)
2. =1.5<>3/2
3. =OR(2+1=3,5>7)
4. =NOT(2+3>4+3)
5. =25>10

65. பின்வருவனவற்றுள் விரிதாள் மென்பொருள்களை **மாத்திரம்** கொண்டது எது?
1. Lotus 1 2 3 , Access, Excell, Open Office Calc
2. Lotus 1 2 3 , Excell, Open Office Calc, Oracal
3. Excell, Open Office Calc, Oracal, VisiCalc
4. Lotus 1 2 3 , Excell, Open Office Calc, VisiCalc
5. Lotus 1 2 3 , Excell, Oracal, Visi Calc

பல்தேர்வு விடைகள்.

1-1	11-4	21-2	31-2	41-1	51-3	61-5
2-2	12-1	22-1	32-1	42-3	52-4	62-3
3-5	13-5	23-2	33-3	43-2	53-3	63-3
4-2	14-2	24-3	34-4	44-3	54-3	64-2
5-4	15-1	25-3	35-2	45-2	55-2	65-4
6-5	16-3	26-1	36-3	46-4	56-1	
7-4	17-4	27-2	37-3	47-4	57-3	
8-2	18-4	28-2	38-2	48-5	58-5	
9-2	19-4,3	29-3	39-2	49-2	59-1	
10-2	20-3	30-3	40-2	50-3	60-2	

அலகு - 14 இணையமும் தொடர்பாடலும்
பல்தேர்வு வினாக்கள்

1. கீழே உள்ள கூற்றுக்களில் இணையத்தைப் பற்றிய **தவறான** கூற்று எது?
   1. இது யாருக்கும் உரித்துடையதல்ல.
   2. பில் கேட்ஸ் என்பவருக்குச் உரித்துடையதாகும்.
   3. இதில் ஒருமுகப்படுத்தப்பட்ட கட்டுப்பாடு இல்லை
   4. இது கணினி வலைகளின் வலையமைப்பாகும்
   5. இதிலிருந்து பெறப்படும் தகவல்கள் மிகவும் சரியானதும் அதிக நம்பகத் தன்மையும் கொண்டவையல்ல.
2. இணையச் சேவையினை வழங்கும் நிறுவனமொன்று எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?
   1. Server 2. Client 3. ISP 4. Teleshop 5. Router
3. http://www.doenets.lk என்பது பின்வரும் எதற்கான உதாரணமாகும்?
   1. சேவையகம் (a server)
   2. சீரான வள இருப்பிடங்காட்டி (Uniform Resource Locator)
   3. வலையமைப்பு ஒன்றின் அணுகல் குறிமுறை (access code of a network)
